Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஐப்பசி 10 ஆம் நாள் ஜ. அவ்வல் 15 (26-10-61) வியாழக்கிழமை இதழ் 218

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

# லேக்ஹவுஸ், டைம்ஸ்

## பத்திரிகைகளை எடுக்க முடிவு

## கார்ப்பரேஷனுக்கு மாற்ற

### அரசாங்கக் கட்சி சிபார்சு

கொழும்பு, புதன்

இலங்கை அரசாங்க பார்லிமெண்ட் கட்சிக்கூட்டம் இன்று காலை கூடி, தேசியப்பத்திரிகை ஸ்தாபனங்களான லேக்ஹவுஸ், டைம்ஸ் ஆப் ஸிலோன் இவ்விரண்டையும் எடுத்து, ஒரு சட்ட பூர்வமான கார்ப்பரேஷனுக்குச் சொந்தமாக்கவேண்டுமென்று அரசாங்கத்துக்கு சிபார்சு செய்வதெனத் தீர்மானித்தது. இவ்விதமே சிம்மாசனப் பிரசங்கத்தில் அரசாங்கம் முன்னர் உறுதி கூறியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

நீதிமந்திரி சாம். பி. ஸி. பர்ணண்டோ சமர்ப்பித்த பத்திரிகை நகல் மசோதாவைப்பற்றி கட்சிக்கூட்டம் விவாதித்தபின் இத்தீர்மானம் செய்தது.

பத்திரிகைக் கவுன்ஸிலை அமைப்பதுடன் இந்த நகல் மசோதா இவ்வாரம் பார்லிமெண்டில் கொண்டுவரப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது. பார்லிமெண்ட் கட்சிக் கூட்டமுடிவின் பயனுக, இம்மசோதா, திருத்தி அமைக்கப்பட சட்டத்தயாரிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படுமெனத் தெரிகிறது.

---

## டாக்டர்கள் நீக்கப்படவில்லை

### ஒப்பந்தத்தில் ஒப்பமிட மறுப்பு

கொழும்பு, புதன்

நேற்றைக்குள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடாவிடில் 11 டாக்டர்களை நீக்கிவிடுவதாக எச்சரித்திருந்தனர். ஆனல் இதுவரை யாரும் நீக்கப்படவில்லை. சென்ற டிசம்பர் பரீட்சையில் தேறிய 11 டாக்டர்களை, 10 நாட்களுக்குள் ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டுமென்றும், இன்றேல் அவர்களை நீக்கிவிடுவதாகவும் கூறியிருந்தனர். இது பற்றிய கடிதம் வைத்திய அதிகாரிகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

---

## ரஷ்யாவுக்குமேல் கதிரியக்கம்

வாஷிங்டன், அக். 25

ரஷ்யா வெடித்த மிகப்பெரும் அணுக் குண்டினல் ஏற்பட்ட கதிரியக்கம், அந்த நாட்டுக்கு மேலேயே காணப்படுவதாயும், 150 மைல் அகலமுள்ள ஒரு மேகக் கூட்டத்தில் மணிக்கு 80 மைல் வேகத்தில் அது நகர்ந்துகொண்டிருப்பதாயும் அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்தனர். ஆயினும் இது கதிரியக்கத்தின் ஒரு சிறு பகுதியே என்றும், கதிரியக்கத்தின் பெரும் பகுதி அடுத்த இளவேனிற் காலம்வரை நிலத்தில் விழாது என்றும் யு. எஸ். விஞ்ஞானிகள் கூறினர்.

---

## தமிழ் பல்கலைக் கழக இயக்கம்

### மன்றம் மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்கு அனுப்பியுள்ள. மகஜர் ஒன்றில் பல்கலைக் கழக புகுமுக வகுப்புக்கு வர்த்தகப் பாடங்களையும் சேர்த்துக்கொள்ளுமாறும், வர்த்தகப் பட்டதாரி வகுப்பு இருக்கச் செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

---

## காங்கோவில் ஐ. நா.

லியப்போல்ட்வில்லி, அக். 25

காங்கோவில் இவ்வாண்டுக் கடைசிவரை தன் நடவடிக்கையை நீடிக்கும் பொருட்டு ஐ. நா. 2 கோடி டாலர் செலவிடும்.

---

## தெ. ஆபிரிக்க இனத்துவேஷம்

### அமெரிக்கா எதிர்க்கிறது

நியூயோர்க், அக். 25

தென்னபிரிக்கா, தன் இனத்துவேஷக் கொள்கைகளைக் கைவிட வேண்டும் என அமெரிக்கா அந்நாட்டை வற்புறுத்தி வந்திருக்கிறது என ஐ. நா. அரசியல் கமிட்டியில் பேசிய அமெரிக்கப் பிரதிநிதி கூறினர். மக்கள் அனைவரும் சமம் என்பதே அமெரிக்காவின் கொள்கை என்றும் அவர் கூறினர்.

---

## ககாரின் குணமடைந்தார்

மாஸ்கோ, அக். 25

சோவியத் வானவெளிவீரர் யூரி ககாரின் தமது சுகவீனத்திற்குப்பின் முதல் முறையாக நேற்று கம்யூனிஸ்ட் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

---

## திருமலை கடலில் கிடைத்த பெரிய சிவலிங்கம்

## மூவாயிரம் ஆண்டு பழைமை வாய்ந்தது

## கோணேசர் ஆலயத்தில் பிரதிஷ்டை

திருக்கோணமலை, வியாழன்

திருக்கோணமலை நிக்கல்சன் லொட்ஸ்சுக்கு அருகிலுள்ள கடலில் நான்கு அடி உயரமும் கால் தொன் நிறையுமுள்ள கருங்கல்லால் செய்யப்பட்ட லிங்கம் ஒன்று கண்டு எடுக்கப்பட்டுள்ளது. இந்த லிங்கம் இப்பொழுது திருக்கோணமலை கோணேசர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இங்கு கண்டெடுக்கப்பட்ட இந்த லிங்கம் 3000 வருடங்களுக்கு முந்திய புராதனமானதென்றும் கால்தொன் நிறையுள்ளதாகவிருப்பதாகவும் புதைபொருள் ஆராய்ச்சி வல்லுணர் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. சுவாமி மலைக்குப் பக்கத்திலுள்ள கடலில் எடுக்கப்பட்ட இந்த லிங்கத்தை 50 அடிஆள நீரில் மூழ்கி எடுத்து வெளியே வெகுசிரமத்துடன் கொண்டுவரப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

### படகு நின்றது!

கடந்த திங்கட்கிழமை சுழியோடும் வீரரான பறங்கியர் திரு. ஜோன்லஸ் என்பவரும் திரு. மைக் வில்சனும் மோட்டார் படகில் அவ்வழியே சென்று கொண்டிருக்கும்போது இந்த லிங்கம் கண்டு எடுக்கப்பட்ட இடத்தில் அப்படகு நகர மறுத்து நின்றுவிட்டதாகவும், திரும்பவும் நேற்று அவர் அந்த இடத்திற்குச் சென்று சுழியோடிப் பார்த்தபோது அடியில் நான்கு அடி உயரமான இந்த லிங்கம் ஒன்று இருப்பதை கண்டெடுத்தாரெனவும் தெரிகிறது.

### கோணேசர் ஆலயத்தில் பிரதிஷ்டை

இந்தச் செய்தியை இவர் உடனே திருக்கோணமலை எம். பி. திரு. என். ஆர். இராஜவரோதயத்துக்கு போன் மூலம் அறிவிக்கவே எம். பி.யும் உடன் அங்கு வந்து சேர்ந்தார்.

அங்கு கூடிநின்று இப்புதுமையைப் பார்த்துக் கொண்டு நின்ற மக்கள் கூட்டமும் எம். பி.யும் அப்பறங்கியரும் இந்த லிங்கத்தை கோணசர் ஆலயத்துக்கு எடுத்துச்சென்று அங்கு பிரதிஷ்டை செய்தனர்.

கோணேசர் ஆலயத்தில் வைக்கப்பட்ட அந்த லிங்கத்துக்கு கற்பூரம் வாங்கி, கற்பூர தீபங்காட்டி சுமார் 10 நிமிஷம் வரை அப்பறங்கியர் பக்தி பரவசமாகி வழிபட்டார்.

---

## அரசியல் சட்ட திருத்த மசோதா

### தமிழரசுக் கட்சியையே பொறுத்திருக்கும்

கொழும்பு, புதன்

நாளை பார்லிமெண்ட் சபை கூடுகையில், தேர்தல் நீதிபதிகளின் சம்பளம் பற்றிய அரசியல் சட்ட திருத்தமசோதாவை அரசாங்கம் கொண்டுவந்து நிறைவேற்ற உத்தேசித்துள்ளது.

இம் மசோதா நிறைவேற இரு சபைகளில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப்பெற வேண்டும். இம்மசோதாவை யு. என். பி. கட்சி எதிர்க்கத் தீர்மானித்துள்ளது. இம்மசோதாவின் விதி தமிழரசுக்கட்சியையே பொறுத்திருக்குமென்று பார்லிமெண்ட் வட்டாரங்கள் கருதுகின்றன.

1960-ம் வருடம் ஜூலை மாத பொதுத்தேர்தல் பற்றி 13தேர்தல் ஆட்சேபனை மனுக்கள் தீர்மானிக்கப் படவேண்டியுள்ளன.

---

பாக்குத் தொடுவாயில்

## தற்கொலை செய்ய முயன்ற இளம் பெண்

### இரு இராணுவ வீரர்களால் காப்பாற்றப்பட்டார்

மாவிட்டபுரம், புதன்

இரு பிள்ளைகளின் தாயாரான கனகரத்தினம், ஓத்தம்மா என்னும் 19 வயது இளம்பெண் இன்று நண்பகல் பாக்குத் தொடுவாய்க் கடலினுள் விழுந்து தற்கொலை செய்ய எத்தனிக்கையில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இரு இராணுவவீரர்களால் காப்பாற்றப்பட்டார்.

காங்கேசன்துறை சுங்க இலாகாக் கட்டடத்திலிருந்து 440 யார் தூரத்தில் ஓத்தம்மா காணப்பட்டார் என்றும் அவர் தற்கொலை செய்யும் நோக்கமாகக் கடலினுள் விழுந்தபோது காங்கேசன் துறை வாடிவீட்டில் முகாமிட்டிருக்கும் இராணுவப்படையைச் சேர்ந்த இராணுவவீரர்களான ஏச். எஸ். ஜெயவிக்கிரமா, டபிள்யு. அபயசோமா ஆகிய இருவரும் கடலினுள் நீந்திச்சென்று இவரைக் காப்பாற்றினர் என்றும்தெரிகிறது

(8-ம் பக்கம் பார்க்க)

# "சேமலாபநிதிச் சட்டம் தோட்டத் தொழிலாளரைப் பாதிக்கின்றது"

## நாவலப்பிட்டி கூட்டத்தில் திரு. நவரட்ண பேச்சு

நாவலப்பிட்டி, புதன்

" பாகுபாடற்ற முறையில் அமுலாக்கப்பட்டுள்ள சேமலாப நிதித் திட்டத்தை வரவேற்கிறோம். முற்போக்கு எண்ணம் கொண்ட நாடுகளில் வளர்ந்து வரும், தொழிலாளர் நலன் கருதும் இதுபோன்ற திட்டங்கள் நடைமுறையில் உருவாகினுல் தான் நாட்டில் வாழும் எல்லா தொழிலாளப் பெருமக்களும் அமைதிகரமான வாழ்வை மேற்கொள்ள முடியும் " என லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் நாவலப்பிட்டி ஜில்லாப் பிரதிநிதி திரு. யூ. நவரட்ண, நாவலப்பிட்டியில் நடந்த ஒரு மாபெரும் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

நாவலப்பிட்டி அர்பன் சபை அங்கத்தவரும், பஸ்பாகே கோரளைக் கிராமச் சங்கத் தலைவருமான திரு. எஸ். மாரசிங்க இக்கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு. நவரட்ண தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டதாவது:

சேமலாபநிதிச் சபையில் கடமை ஆற்றும் ஊழியர்களை எவ்விதத்திலும் குறைகூற முடியாது. போதிய அனுகூலங்களும் வசதிகளும் அவர்களுக்குப் போதாதிருக்கலாம். ஆனல் நிதிச்சபை துரிதமாகச் செயலாற்ருமல், ஆமை வேகத்தில் போவதினல் மலைத் தோட்டத் தொழிலாளர்கள் அதிருப்தியடைந்து வருகிருர்கள்.

முற்ருக இந்நாட்டின் தொடர்புகளை நீக்கிவிட்டு இந்தியாவுக்குத் திரும்பும் மலைத்தோட்டத் தொழிலாளர்கள், தங்களுடைய சேமலாபநிதிப் பங்கை பெற முடியவில்லை. இந்தியாவுக்குப் போயிருந்தும் அங்கு இருந்தவண்ணமே எடுக்கலாமென்ருலும் அதுவும் முடிந்த காரியமாக இல்லை. ஒருவர் தனது வாரிசை ஏற்படுத்திவிட்டு இறந்துவிட்டால், வாரிசுக்கு அப்பங்கை ரொக்கப்பணமாகக் கொடுப்பதே நல்லது. ஆனல் இப்போதுள்ள இந்நிதிச் சட்டம் மிகவும் சிககலுடையதாக இருக்கிறது. துரதிருஷ்ட வசமாக வாரிசாரின் வாரிசும், அந்த வாரிசினுடைய வாரிசும் இடைக் காலத்தில் இளம் பருவத்தில் காலமாகிவிட்டால் அப்பணம் யாருக்கும் சொந்தமின்றி போய்விடுகிறது. இதை மாற்றியமைக்க வேண்டும்.

ஐம்பது வயதுடையவர்கள் இந்நிதித் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. சேர்ப்பதிலும் பயனில்லை. ஆனல் சுமார் நாற்பது வயதுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தங்கள் சேமிப்பின் மூலம் வயோதிப காலத்தில் எவ்வளவு தொகையைத் தான் பெறுவார்கள். அப்பணம் எத்தனைநாள் ஜீவியத்துக்குப் போதும் என்ற பிரச்சினைகளையும் நிதானித்துப் பார்த்தால் தான் உண்மை புலனுகும். எனவே ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேலுள்ளவர்களின் சேவைக காலத்தை வகுத்து, ஒரு வருடத்திற்கு ஒரு மாத சம்பள விகிதம் தோட்ட நிர்வாகம் உபகாரப் பணமாகக் கொடுக்கப்பட வேண்டும். என்பதை பலமாக வற்புறுத்துகிருேம். இதுதான் நீதியும், நர்மையுமானது என்பதனைச் சுட்டிக்காட்டி மனித இதயத்தைத் தொட்டுப் பார்க்குமாறும் கேட்கிருேம்.

தோட்ட மக்களுக்குப் பல கோணத்திலும் துன்ப நிலை உண்டு. நாளுக்கு நாள் வேலையில்லாப் பிரச்சினை சிரஞ்சீவி வரம்பெற்று வருகிறது. மலைத் தோட்ட வேலைகளை மாத்திரமே நம்பி வாழும் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்க்கப்பட்டபாடு ஒரு புறமிருக்க, வாலிபர்களாக்கிவிட்டும் கூட தாங்களே சோறு போட்டுக் காப்பாற்ற வேண்டிய சங்கடமான நிலையிலிருக்கிருர்கள்.

தேயிலை - ரப்பர் தொழில்களை மாத்திரம் சதாவும் நம்பியிருப்பதில் பிரயோஜனமில்லை. நகரப் புறங்களிலும் வேலைகள் கிடைப்பது பூஜ்யம். ஆகவே கைத்தொழில் வளமடையக் கூடிய ஆக்க வேலைகளில் இறங்கவேண்டிய கட்டாய வேளை வந்துவிட்டது. இத்தகைய நல்ல காரியங்கள் உருவாக வேண்டுமானல் மலைநாட்டில் இயங்கும் இரு பெரிய ஸ்தாபனங்களும், தங்கள் கொள்கை - வேற்றுமைகளை மறந்து தொழிலாளர்களின் நன்மைக்காக ஒன்றுபட வேண்டும். தலைமைப் பதவி தங்களுக்கே வேண்டுமென்ருலும் பரவாயில்லை. தொழிலாளர்கள் நல்வாழ்வு வாழ ஏற்ற வழிவகைகள் செய்தாக வேண்டும்.

---

## உங்கள் நோய்

துலைப்படுத்த உத்தரவாதம் ..ரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

---

## கார் இருந்தும் பயனில்லை!

நியூயார்க், அக். 25

பிரமாண்டமான வானளாவிய கட்டிடங்களை உடைய அமெரிக்காவின் நியூயார்க்கில் கூட, செல்வம் கொழிக்கும் தனவந்தர்களாயிருந்தாலும், பலவிதமான அவதிகளைச் சகித்துக் கொண்டு தான் வாழ வேண்டியிருக்கிறது.

நியூயார்க்கில் சிப்பந்தி வேலைக்கு ஆட்கள் கிடைப்பது அரிது. ஆகையால் பெரிய பெரிய ஆபீஸ் கட்டிடங்களிலும் சரி, பெரிய பணக்காரர்களின் வீடுகளிலும் சரி அதிகமான சிப்பந்திகள் இருக்க மாட்டார்கள்.

செதந்தத்தில் பெரும்பாலானேர் கார் வைத்துக்கொண்டிருந்தாலும், நியூயார்க் நகருக்குள் அதை உபயோகிக்க மாட்டார்கள். ஏனென்ருல் மோட்டார் காரை நிறுத்தி வைப்பதற்கு நியூயார்க் நகருக்குள் இடம் கிடைக்காது. இந்த சிரமத்துக்காக, நகருக்குள் காரில் பிரயாணம் செய்யாமல், நடந்தே போவார்கள். அல்லது டாக்ஸியில் பிரயாணம் செய்வார்கள்.

---

புதுடில்லி, அக். 25

அகாலியர்களின் பஞ்சாபி சுபா கோரிக்கையை எதிர்த்து உண்ணவிரதம் இருந்த யோகிராஜ் சூரியதேவ் பிரதமர் நேருவை பேட்டி கண்டார்.

# இன்றைய கல்வி மக்களை கோழைகளாய் மாற்றியுள்ளது

## பெற்றோர்தினவிழாவில் வித்தியாதரிசி பேச்சு

மாவிட்டபுரம், புதன்

''பாடசாலைகளை அரசாங்கம் கையேற்ற பின் பாடசாலைகளுக்கும், பெற்றோருக்குமுள்ள தொடர்பு பன்மடங்கு பலப்படுத்தபட்டுள்ளது''. இவ்வாறு, வீமன்காமம் ஆங்கில பாடசாலைப் பெற்ருர்தினவிழாவில் தமது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கையில் அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் குறிப்பிட்டார். அதிபர் மேலும் பேசுகையில், "பிள்ளைகளின் வசதியை முன்னிட்டுச் சென்ற வருடத்திலிருந்து வீட்டுப் பணி, கைப்பணி, விஞ்ஞானம் முதலிய பாடங்களும் படிப்பிக்கப்படுகின்றன'' என்ருர்.

வட்டார வித்தியாதரிசகர் திரு. ஆ. சிவகுரு தலைமையில் நடந்த இவ்விழாவில் பிள்ளைகளின் யோகாசனப் பயிற்சிகள், நடனங்கள், கோலாட்டங்கள், நாடகம் என்பன சிறப்புற அமைந்திருந்தன.

தலைவர் தமது உரையில் கூறியதாவது:-

''பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றபின், ஆசிரியர்கள், பெற்ருேர்கள், 'இது அரசாங்கப் பள்ளிக்கூடந்தானே' என்று அலட்சியமாய் இருந்துவிடுவார்களோ என நான் அஞ்சினேன். ஆனல் இந்தப் பாடசாலையில் அத்தகைய மனேபாவம் காணப்படவில்லை. அதற்கு மாருக முன்பிருந்ததிலும் பார்க்க சிறந்த கவனம் எடுக்கப்பட்டுள்ளது தெரிகிறது.

நாட்டின் இன்றயதேவை வெறும் ஏட்டுப் படிப்புமாத்திரமல்ல. இன்றைய சமுயதா சூழ்நிலையில் கல்வி மக்களை வெறும் கோழைகளாய் மாற்றியுள்ளது. இந்த நிலை வளர்ந்துகொண்டே போனல் வருங்கால சமுதாயமே கோழைச் சமுதாயமாய் மாறிவிடலாம். இப் பாடசாலையில் வெறும் கல்விக்கு மாத்திரம் இடம் கொடாது யோகாசனப் பயிற்சிகள் தேகப் பயிற்சிகள் முதலியவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுத்து இருப்பது வருங்கால சமுதாயத்திலே இப் பாடசாலைக்கு உள்ள சிரத்தையை நன்கு புலப்படுத்துகிறது."

பண்டிதர் திரு. ஆர். நமசிவாயகம் நன்றியுரை கூறினர்.

## நீதிக்கு முன் யாவரும் சமம்

### பஞ்சாயத்து தலைவிக்கு ரூ. 5,000 வெகுமதி

பட்டாலா, அக். 25

பஞ்சாயத்துத் தலைவி ஒருவர், தனது சொந்த மாமனுருக்கு எதிரான வழக்கு ஒன்றை நீதி முறை தவருமல் நடத்தி தீர்ப்பளித்த அரிய நிகழ்ச்சி ஒன்றை, பஞ்சாப் முதன் மந்திரி, ஸ்ரீ பிரதாப்சிங் கெய்ரான் நேற்று இங்கு கூறினர்.

பெண்கள் கூட்டமொன்றில் பேசிய அவர், இந்த ஆச்சரியமான சம்பவத்தை வெளியிட்டார்.

"இந்த பஞ்சாயத்து தலைவியின் மாமனர் ஹரிஜன் ஒருவரைக் கொடுமைப்படுத்தினர். அந்த தலைவியின் கண் முன்பே இந்தச் சம்பவம் நடந்தது. பிறகு மாமனர் மீது அந்த ஹரிஜன் பஞ்சாயத்து நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கில் தனக்கு எதிராக தீர்ப்பளித்ததால், தலைவியின் கணவனை ..வ னர். ரது மகனையும் மருமகளான தலைவியையும், வீட்டை விட்டு வெளியேற்றி சொத்துக்கள் எதுவும் தராமல் செய்துவிடுவேனென்று மாமனர் மிரட்டினர். தீரம்மிக்க, அந்தப் பெண் தலைவி, 'கிராம நிர்வாகத்தை நான் ஏற்று நடத்துகிறேன். உண்மையும் நீதியும் காப்பாற்றப்பட்டே ஆகவேண்டும்' என்று துணிச்சலுடன் கூறி பாதிக்கப்பட்ட ஹரிஜனுக்கு சாதகமாக தீர்ப்பளித்தார்" என்று ஸ்ரீ கெய்ரான் கூறினர்.

"அந்தப் பெண் காட்டிய கடமை உணர்ச்சிக்கும், நேர்மைக்கும் வெகுமதியாக, ராஜ்ய சர்க்கார் அவருக்கு ரூ 5000 பரிசளித்தது. மாதம் ரூ. 500 வருமானம் வரக்கூடிய, ஜம்மு காஷ்மீர் போக்குவரத்து பர்மிட் ஒன்றும் வழங்கப்பட்டது என்று அவர் மேலும் கூறினர்.

## லெபனன் பிரதமர் ராஜினமா

பேருட், அக். 25

லெபனன் பிரதம மந்திரியின் ராஜினமாவை ஜனதிபதி ஏற்றுக்கொண்டிருக்கிருர்.

---

இந்த நல்ல ஏற்பாட்டைத் துரிதமாகச் செய்யாத பட்சத்தில் மலை நாட்டில் பஞ்சமும், வறுமையும், தலைவிரித்தாடும்."

## பொலிஸ்காரரின் சைக்கிளுக்கு கல்லால் எறிந்தார்

### தீர்ப்பு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், புதன்

சுன்னுகத்தைச் சேர்ந்த சின்னவன் பசுபதி என்பவர் பொலிஸ்கான்ஸ்டபிள் பியதாசா என்பவரை ஏசியதாகவும் அவரின் சைக்கிளுக்கு கல்லால் எறிந்ததாகவும் சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலையினல் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரி தான் சுற்றவாளியென்று கூறவே நீதிபதி மேல் விசாரணையை நவம்பர் மாதம் 28-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிதரப்பில் திரு. வி. செல்லத்துரை ஆஜரானர்.

## பதுளையில் கலைவிழா

பண்டாரவளை, புதன்

எதிர்வரும் 28-10-61 சனிக்கிழமை காலை 9-15 முதல் மாலை 8 மணிவரை பதுளை ஊவாக்கல்லூரி தமிழ்மாணவர் மன்றத்தின் சார்பில் கலைவிழா ஒன்று நடைபெறவிருக்கிறது. நாடகங்கள், திரைப்பட நிகழ்ச்சிகள் இன்னிசை விருந்துகள் இடம்பெறும்.

# இலங்கையின் பொருள்களை வாங்கும் நாடுகளுடன் மட்டுமே வர்த்தகம்

## அரசாங்கத்தின் புதிய கொள்கை

கொழும்பு, புதன

இலங்கையின் உற்பத்திப் பொருள்களை வாங்கும் நாடுகளுடன் மட்டுமே வர்த்தக உறவை வைத்துத் கொள்வதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இந்த முடிவைத தொடர்ந்து ஐக்கிய அராபியக் குடியரசு, பர்மா, சீன ஆகிய நாடுகளிலிருந்தே அது அரிசி இறக்குமதி செய்யும்.

அடுத்த ஆண்டு இம்மூன்று நாடுகளிலிருந்தும் 5,80,000 டன் அரிசியை வாங்க உணவு அமைச்சு தீர்மானித்திருக்கிறது.

இலங்கை இதுவரை வருடமொன்றுக்கு சுமார் 5,32,173 டன் அரிசியை பர்மா, சீன, வியட்னம், அமெரிக்கா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வாங்கி வந்தது.

சகல வர்த்தகத் துறையிலும் புதிய கொள்கை அமுல் நடத்தப்படுமென அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

......

## லஞ்சக்கமிஷன் முடிவு பற்றி டட்லி மசோதா

கொழும்பு, புதன்

எதிர்க்கட்சித் தலைவரான திரு. டட்லி சேனநாயக்கா, தனிப்பட்டவர்கள் மசோதா ஒன்றைத் தாம் சமர்ப்பிப்பதற்காகப் பிரதிநிதிகள் சபையிடம் தவணை கேட்க தீர்மானித்துள்ளார். பார்லிமெண்டரி லஞ்சாக்கமிஷனின் முடிவுகள் பற்றிய மசோதாவொன்றைத் தனிப்பட்ட முறையில் சமர்ப்பிப்பதற்காகவே திரு. டட்லி சேனநாயக்கா இவ்வாறு கேட்டுக்கொள்ளப் போகிருர்.

பார்லிமெண்டரி லஞ்சக்கமிஷனின் முடிவுகள் அரசியல் உரிமைகளையும் மற்றும் உரிமைகளையும் பாதித்துள்ளதென்றும், அதற்குப் பாதுகாப்புத் தேடும் மசோதாவொன்றை அவர் தனிப்பட்ட முறையில் சமர்ப்பிப்பார் என்றும் தெரிகிறது.

## சர்வதேச திரைப்பட விழா

### 13 நாடுகள் பங்கு பற்றும்

புதுடில்லி, அக். 25

புதுடில்லியில் அக்டோபர் 27-ந் திகதி ஆரம்பமாகும் சர்வதேச திரைப்பட விழாவில் 38 நாடுகளின் திரைப்படங்கள் திரையிடப்படும். 13 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துகொள்கிருர்கள். அரசாங்கத்தின் அழைப்பை கீழ்க்கண்ட இந்தியப்பட நடிகர், நடிகைகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர். குமாரிகள் வைஜயந்திமாலா, பி. சரோஜாதேவி, சாவித்திரி கணேஷ், திருவாளர்கள் மஞ்சுடே அசோக்குமார், தேவ் ஆனந்த், ராஜேந்திரகுமார், சிவாஜி கணேசன் ஜெமினிகணேசன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

---

## திரு. இலங்கரத்ன

புதுடில்லி, அக். 25

இலங்கை வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன சாரநாத், புத்தகையா ஆகிய இடங்களுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிருர்.

---

## யானைக்கால் நோயை ஒழிக்க ரூ. 40 லட்சம்

கொழும்பு, புதன்

யானைக்கால் நோயை ஒழிக்கும் பொருட்டு 40 லட்சம் ரூபாய் செலவில் சுகாதார அமைச்சு தீர்மானித்திருக்கிறது.

# ரஷ்ய அணுசோதனைக்கு உலகெங்கும் கண்டனம்

## மகாராணி எலிஸபெத், தத்துவ ஞானிரஸ்ஸல் ஆகியோர் கவலை

லண்டன், அக். 25

**சோவியத் ரஷ்யாவின் ராட்சஸ அணுக் குண்டுப் பரிசோதனையை ஆட்சேபிக்கும் வகையில் உலகெங்கும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.**

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இது பற்றிக் குறிப்பிட்டு, எலிஸபெத் மகாராணி ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொண்டார். பார்லிமெண்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் ரஷ்யாவின் நடவடிக்கையைக் கண்டித்தன. பிரபல தத்துவஞானி பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் தலைமையில் ஒரு தூது கோஷ்டி லண்டனிலுள்ள சோவியத் தூதுவராலயத்துக்குச் சென்று ஆட்சேபனை தெரிவித்துக்கொண்டது.

அணு சோதனையால் உலகம் முடியுமுன், அணு சோதனைக்கு முடிவு கட்டுமாறு இந்தியப் பாதுகாப்பு மந்திரி திரு கிருஷ்ணமேனன் பம்பாயில்வைத்து வல்லரசுகளை வேண்டிக்கொண்டார்.

ரஷ்யாவின் நடவடிக்கை ஒரு பயமுறுத்தும் முயற்சி என ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ராபர்ட் மெண்டிஸ்பார்லிமெண்டில் அறிவித்தார்.

இவ்விதச் செய்கை மூலம் மேற்கு வல்லரசுகளை பயமுறுத்த ரஷ்யா நினைத்தால் அது தவருக முடியும் என்ருர் பிரிட்டிஷ் எதிர்க் கட்சித் தலைவர் திரு கெயிட்ஸ்கல்.

ரோம் நகரில் சர்வதேச சோஷலிஸ ஸ்தாபனம் ரஷ்ய அணுக்குண்டுப் பரீட்சையை வன்மையாகக் கண்டித்தது.

ரஷ்யாவின் அணுக்குண்டு வீச்சினுல் ஏற்பட்ட கதிரியக்கம் மத்திய ஆசியாவை நோக்கிப் பரவிவருவதாயும், பஸிபிக்கை நோக்கித் திரும்பிய பின் அது ஸ்காண்டிநேவியாவை அடையுமென்றும் ஸ்காண்டி நேவிய விஞ்ஞானிகள் கூறினர்.

### மந்திரியின் கழுதைச் சவாரி!

ஆக்ரா, அக். 25

இந்தியா வந்துள்ள அமெரிக்க விவசாயத்துறை அமைச்சர் ஆர்வில் பிரீமன் நேற்று ஆனந்தமாக ஒரு கழுதைமீது சவாரி செய்தார்!

கிராமப் புறங்களைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்ட அமெரிக்க அமைச்சர் ஓரிடத்தில் சாலையின் ஓரமாக ஒரு விவசாயி நிற்பதைக் கண்ணுற்ருர். காரை நிறுத்தச் சொல்லி அவ்விவசாயியை அருகில் அழைத்து அப்பகுதியில் வேளாண்மை செய்யும் பயிர்கள், பயிரிடும் முறைகள் ஆகியவை பற்றி விசாரித்தார். அப்பொழுது அவ் விவசாயியின் கழுதை அருகில் மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டதும் அதன்மீது சவாரி செய்ய வேண்டுமென்ற ஆசை அமெரிக்க அமைச்சருக்கு எழுந்தது. விவசாயியிடம் தமது ஆசையைத் தெரிவித்த பொழுதும் அவ்விவசாயியும் இணங்கினுர். அமெரிக்க அமைச்சர் கழுதைமீது ஆனந்தமாகச் சவாரி செய்தார்.

சிறிது ஓரத்தில் ஓர் ஒட்டகம் ஒன்று நின்றுகொண்டிருந்தது. அதன் மீதும் சவாரி செய்ய அமெரிக்க அமைச்சர் விரும்பினுர். ஆனுல் பிறகு என்ன காரணத்தினுலோ ஆசையைக் கைவிட்டுவிட்டார்.



காலஞ்சென்ற ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்டுக்கு 1961ம் ஆண்டுக்கான சமாதான நோபல்பரிசு வழங்கப்பட்டது. ஆபிரிக்காவில் சமாதான யாத்திரையை மேற்கொண்டசமயம் விமான விபத்தில் அவர் உயிர் நீத்தார். நேற்று முன்தினம் ஐ. நா தினம் கொண்டாடப்பட்ட போது அவர் நம்மிடையே இல்லை ஐ. நா. பொதுச் சபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதுஅவரது ஆசனம் காலியாக இருப்பதை மேலே காணலாம்.

## "வல்லரசுகளுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படவேண்டும்"

### ஐ. நா. தினக் கூட்டத்தில் நிதிமந்திரி பேச்சு

கொழும்பு, புதன்

"ஐ. நா. ஒரு இயங்கும் சக்தியாக விளங்க வேண்டுமானுல் வல்லரசுகளுக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட வேண்டியது அவசியம்" என நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நேற்று கொழும்பு ராயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற ஐ. நா. தினக் கூட்டத்தில் பேசும் போது கூறினுர்.

நியூயோர்க்கில் தாம்இருந்த போது ஐ.நா. நடவடிக்கைகளை முக்கியமாகக் கவனித்ததாயும், அவை ராஜதந்திரத்தைக் கொண்டு அமைந்திருந்ததாயும் நிதி மந்திரி கூறினுர்.

"இலங்கை சிறிய நாடாயினும் நாட்டின் கருத்துக்களை நம் பிரதிநிதிகள் அங்கு வற்புறுத்த வேண்டும். இந் நாட்டின் பிரதிநிதியாய் இருந்த சர் கொரியாவும், இதர பிரதிநிதிகளும் சிறந்த சேவை செய்திருக்கிருர்கள்" என்றும் அவர் கூறினுர்.

சர் குளோட் கொரியா, திரு மொண்டேகு ஜயவிக்ரமா ஆகியோரும் இக் கூட்டத்தில் பேசினர்.

**இந்தியாவில்**

டில்லியில் நடைபெற்ற ஐ. நா. வைபவத்தில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டும், சென்னை வைபவத்தில் நீதிபதி திரு. எஸ். ராமச்சந்திர ஐயரும் கலந்துகொண்டனர்.

### இறைச்சிக் கடை அவரது இல்லம்

ரக்வானை, செவ்வாய்

ரக்குவானையில் வீட்டுத்தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ரக்குவானை ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் அப்போதிக்கரிஒருவர் ஆஸ்பத்திரி மின்சார நிலையத்தில் வசித்து வருகிருர்.

ரக்வானை நகரசபை காரியதரிசி காலியாகவுள்ள இறைச்சிக்கடையொன்றில் வசித்து வருகிருர்.

### மன்னுர் எம். பி.க்கு வரவேற்பு

மன்னுர், புதன்

கொழும்பிலிருந்து தம் தொகுதி வந்து சேர்ந்த மன்னுர் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோனுக்கு மக்கள் சிறந்த வரவேற்பளித்தனர்.

### பாவேக்கு நேரு பாராட்டு

பம்பாய், அக். 25

ஆச்சார்யாவினேபா பாவே நாட்டில் ஒரு ஐக்கிய சக்தியாய் விளங்கி வருகின்ருர் என பிரதமர் நேரு பாராட்டினுர்.

### நேருவின் அமெரிக்க சுற்றுப் பிரயாணம்

புதுடில்லி, அக். 25

பிரதம மந்திரி நேருவின் அமெரிக்க சுற்றுப் பிரயாணம் பற்றி மேற்கொண்டு தகவல்கள் கிடைத்துள்ளன.

நவம்பர் மாதம் 5 ம் தேதி ஸ்ரீ நேரு நியூயோர்க்கை அடைவார். மறு நாள் 6 ம் தேதி வாஷிங்டனுக்கு வருவார். 9 ம் தேதிவரை அங்கு தங்கிவிட்டு 10 ம் தேதி மீண்டும் நியூயோர்க் செல்வார். இரு தினங்கள் நியூயோர்க்கிலிருந்தபின், லாஸ் ஏஞ்ஜல்ஸுக்குச் செல்வார். இறுதியாக மெக்ஸிகோவுக்குச் சென்று விட்டு நவம்பர் 19 ம் தேதி புதுடில்லி திரும்புவார்.

## தொழிலாளர் நலனில் சமசமாஜக் கட்சி

### ல. தோ. தொ. யூனியன் மகாநாட்டில் உரை

பண்டாரவளை, புதன்

"தேசிய விடுதலையை நோக்கி ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வந்த இலங்கை சமசமாஜக் கட்சி தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய்யத் துவங்கியதற்குக் காரணம் அவர்கள் இந்தியர், அல்லது தமிழர் என்பதற்காக அல்ல. இந்நாட்டின் ஜீவாதாரமான தொழிலாளர்கள் என்பதற்காகவேதான்."

இவ்வாறு ல. தோ. தொ யூனியன் வருடாந்த மகாநாட்டில் உரைநிகழ்த்திய மேற்படி யூனியன் உதவிக் காரியதரிசி திரு. நா. பொ. தர்மலிங்கம் கூறினுர். கடந்த ஞாயிற்றுக்கிழமை பதுளையில் நடைபெற்ற இம்மகாநாட்டிற்கு திரு கே. கிட்ணசாமி தலைமை வகித்தார். தொடர்ந்து திரு. தர்மலிங்கம் பேசியதாவது:

தோட்டத் தொழிலாளர்கள் நலனைக் கருதி எமது கட்சி பல போராட்டங்களை தலைமை தாங்கி நடத்திவந்துள்ளது.

எத்தனையோ சந்தர்ப்பங்கள் கிடைத்தும் தோட்டத் தொழிலாளருக்கென உண்மையுடன் பாடுபட காங்கிரஸ் தவறிவிட்டது. 1953-ம் ஆண்டில் நடைபெற்ற அரிசி விலைப் போராட்டத்தில் மாபெரும் ஸ்தாபனமாக விளங்கிய காங்கிரஸ் ஸ்தாபனமும் இறங்கியிருந்தால் அன்றுதொட்டு ஒரு தொழிலாளர் அரசாங்கமே இலங்கையை ஆட்சிபுரியும்.

திருவாளர்கள் சு. பிரேமசம்பு, என். ஆர். பழனியாண்டி, கிட்ணசாமி, வி. சு. ராசா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

## பாட்னுவில் 67வது காங்கிரஸ் மகாநாடு

### ஜனவரி 4ந் திகதி ஆரம்பமாகும்

பாட்னு, அக். 25

அகில இந்திய காங்கிரஸின் 67-வது மகாநாடு மிகவும் சிக்கனமான அளவில் நடைபெறும் அடுத்த (1962) ஜனவரி 4-ந் திகதி ஆரம்பமாகி, 3 நாள் மட்டுமே நடைபெறும். இன்றுகாலை இங்குநடைபெற்ற காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டியின் இணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் காங்கிரஸ் அக்கிராசனர் ஸ்ரீ என். சஞ்சீவ ரெட்டி பேசுகையில் இதை அறிவித்தார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் இங்கு நடைபெறுவதற்கு பதிலாக 15 நாளைக்கு முன்னுல் டில்லியில் நடைபெறுமென்று அவர் கூறியதாகத் தெரிகிறது. இந்தச் சிறிய மாறுதலைத் தவிர, மகாநாட்டு நடவடிக்கைகளில் வேறு மாறுதல் எதுவும் இராது என்ருர்.

வரவேற்புக் கமிட்டிக் கூட்டம் சென்ற ஜூலையில் முதல் முறையாகக் கூடியபொழுது மகாநாட்டுச் செலவை ரூ. 10 லட்சத்திற்குள் அடக்கவேண்டுமென்று ஸ்ரீ ரெட்டி யோசனை கூறினுர். இன்று அவர் இணைப்புக் கமிட்டியில் பேசுகையில் செலவு ரூ. 5 லட்சத்திற்கு மேல்போகக்கூடாதென்று கூறியதாகத் தெரிகிறது.

பாட்னுவின் மேற்குப் பகுதியில் மகாநாடு நடக்கவிருக்கும் இடத்திற்கும் ஸ்ரீ சஞ்சீவரெட்டி சென்று பார்வையிட்டார்.

பாட்னுவின் தெற்குப் பகுதியில் மாநாட்டுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இடத்தில் ஏற்கனவே 3 முறை வெள்ளம் வந்துவிட்டதால் அது கைவிடப்பட்டுவிட்டது.

பாட்னு காங்கிரஸ் உபசரிப்புக் கமிட்டியின் தலைவராக யூனியன் ரயில்வே மந்திரி ஜகஜீவன்ராம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### மன்னரை ஏமாற்றிய கோழி

பாரிஸ், அக். 25

சொன்ன உடன் முட்டையிடும் கோழி இன்று ஈரான் மன்னர் தம்பதிகள் பார்த்து மகிழ முட்டையிட மறுத்துவிட்டது. இந்த அதிசய கோழியை வளர்க்கும் ஓட்டல் சொந்தக்காரருக்கு கோழியின் சத்தியாக்கிரகம் பெரும் சங்கடமாகப் போயிற்று.

பிரான்சுக்கு வந்திருக்கும் ஈரான் மன்னரும், அவரது மனைவி அரசி பாராவும் பான்ட் சாட்ரெயின் என்ற இடத்திலுள்ள புகழ் பெற்ற ஓட்டலுக்கு உல்லாசமாகச் சென்றிருந்தனர்.

அந்த ஓட்டலில் ஒரு "அதிசயக் கோழி" வளர்க்கப்படுவதாக அரச தம்பதிகள் கேள்விப்பட்டே அங்கு சென்றனர். முட்டையிடச் சொன்னதும் முட்டையிடும் கோழி ஒன்றை அந்த ஓட்டல் சொந்தக்காரர் வளர்த்துவருகிருர்.

அரச தம்பதிகள் மகிழ கோழி அவர்களின் முன்னிலைக்குக் கொண்டு வரப்பட்டது. சொந்தக்காரரும் பணித்தார். ஆனுல் கோழி முட்டையிட மறுத்துவிட்டது. கத்திப் பார்த்தார், அதட்டிப் பார்த்தார், அன்பு வார்த்தை சொல்லிப் பார்த்தார். ஆனுல் கோழி மசியவில்லை. மிரள மிரள அரசியைப் பார்த்துக் கொண்டே நின்றது.

பெரும் சங்கடப்பட்டார் ஓட்டல்காரர். வேறு வழியில்லை. முயற்சியையும் கைவிட்டார்.

## மணி வாக்கு

"பிறர் வாழ்வில் துயரை அகற்றி மகிழ்ச்சி உண்டாக்குபவன் நித்திய ஜீவனை அடைவான்".


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஐப்பசி மீ 10 உ (26-10 61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## கதிர்காம மடங்கள்

கதிர்காமத்திலுள்ள 22 மடங்களையும் மாணிக்க கங்கைக்கு மறுபக்கத்துக்குமாற்றிவிட உத்திதேசித்திருப்பதாயும், இதுபற்றி ஆட்சேபமுள்ளவர்கள், வருகிற டிசம்பர் மாதம் 6ந் திகதிக்குள், அதற்கான காரணத்துடன் அரசாங்க நகர அமைப்பாளருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் விளம்பரம் செய்யப்பெற்றுள்ளது.

இது சம்பந்தமாக இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. ஸ்பென்சர் இராசரத்தினம் வெளியிட்டுள்ள வேண்டுகோளையும், மற்றோர் அன்பர் எழுதியுள்ள கடிதத்தையும் வேறு இடத்தில் பிரசுரித்திருக்கிறோம். கதிர்காமத்திலுள்ள மடங்கள் கோவிலுக்குப் பக்கத்தில் இருப்பதால், அங்கு தரிசனத்துக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கு மிகவும் வசதியாகவுள்ளது. அம் மடங்களை ஆற்றுக்கு அக்கரைக்கு மாற்றினால் குழந்தை குட்டிகளும், பெண்களும் வந்து தரிசித்துப் போவது சிரமப்படும். இரவு பூசை, அதிகாலை பூசை இவற்றுக்கு வரும் பக்தர்கள் அதிக சங்கடப்படுவர். ஆகவே வழிபடுகிறவர்களின் மேலான நன்மையைக் கருதி, இம் மடங்கள் தூரமான இடங்களுக்கு மாற்றப்படக்கூடாது.

வரவரக் கூட்டம் இப் புனித ஸ்தலத்துக்கு அதிகமாக வருகின்றது. அதிகமான மடங்கள் தேவைப்படுகின்றன. அப்படி இருக்க, ஏற்கனவே பெரும் செலவில் கட்டப்பட்டுள்ள மடங்களை அகற்றி ஆற்றுக்கு அப்பால் மாற்றுவது, பணக்கஷ்டமான இக் நேரத்தில் அறிவுடைமையாகாது. வேண்டுமானால் ஆற்றுக்கு அப்பால் புதிய மடங்களைக் கட்டலாம். ஆனால் ஏற்கனவே கோவிலுக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள மடங்களை எக்காரணம் பற்றியும் அகற்றுவது வழிபடச் செல்லும் குடும்பங்களுக்குச் செய்யும் பெரும் தீங்காகும்.

ஜனக் கூட்டம் அங்கு வரவர அதிகம் பெருகுவதால், சில புனிதமற்ற காரியங்கள் நடப்பதாகத் தெரிகிறது. அவ்வித ஒழுங்கீனங்களை அகற்றுவதில் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டியதே. அதைவிட்டு, புனிதமான மடங்களை அகற்ற வேண்டுமென்ற யோசனை மடமை[illegible] முடித்தனமாகும். ஆகவே இவ்வித தவறு ஏற்படாமல் தடுக்க, சம்பந்தப்பட்ட மக்கள் எல்லாரும் கூடுமான முயற்சியை இது சமயம் எடுக்க வேண்டும். திரு. ஸ்பென்சர் இராசரத்தினம் கேட்டுள்ளது போல், எல்லாப் பொது ஸ்தாபனங்களும், சங்கங்களும் கூடி, இது பற்றிய தங்கள் ஆட்சேபங்களை தக்க காரணத்துடன் விளக்கி தீர்மானங்கள் நிறைவேற்றி, பிரதமர் சிறிமாவோவுக்கும், உள்நாட்டு மந்திரி, அரசினர் நகர அமைப்பாளர் முதலியவர்களுக்கும் அனுப்பிவைக்கவேண்டும். இச் சமயம் அசமந்தமாக இருப்பின், கதிர்காமத்தைப் பாதுகாக்கக்கூடிய சந்தர்ப்பத்தை இழந்ததாகும். கூடுமானவரை சிங்கள மக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் இவ்விஷயத்தில் பெறுவது அதிக உபயோகமாக இருக்கும். ஏனெனில் பொதுச் செல்வமான கதிர்காமம், பல சமய, சமூகத்தவரையும் பிணைக்கும் மேலான பொது ஸ்தாபனமாகும். மடங்களை அகற்றுவதால், சிங்கள மக்களுக்கும் வசதியீனம் ஏற்படுமாதலால், அவர்களும் இவ் விஷயத்தில் ஆட்சேபிக்கக் காரணமுண்டு.

### பெரிய ஆபத்து

ஐந்து கோடி டன் சக்தியுள்ள பெரிய குண்டை ரஷ்யா சொன்னபடி வெடித்து விட்டதாம்! எவ்வளவு பேர் ஆட்சேபித்தும பயனில்லை. இதற்குப் போட்டியாக அமெரிக்காவும் 50 கோடி டன் சக்தியுள்ள குண்டைச் செய்து வெடிக்க விடுவதாயின், வருகிற பிப்ரவரி மாதம் எட்டு கிரகங்கள் கூடுகையில், உலகுக்கு பேரழிவு ஏற்படுமென்ற சோதிடமும் பலித்துவிடக்கூடும்.

வானவெளியிலே பல சதுர மைல்களுக்கு அதிகளைவிதைத்துள்ளதாம் அமெரிக்கா. இரு போட்டி வல்லரசுகளும், ஏழை மனித வர்க்கத்தை இப்படிப் பயமுறுத்த வேண்டும். உலக ஆதிக்கம் பெறுவதற்கா? முன்னர் ஜெங்கிஸ்கான், அலெக்ஸாந்தர், நெப்போலியன், ஹிட்லர், முஸோலினி முதலியவர்களுக்கு நேர்ந்த கதியைக்கண்டவர்கள், அவ்வித ஆதிக்கவெறியைக் கொள்ள முடியாது.

ஒரே குடும்பமாக வாழவே உலக மக்கள் நெருங்கி வருகிறார்கள். இரு வல்லரசுகளும் பயங்கர தற்கொலை ஆயுதப் போட்டிகளை விட்டு, ஒரே உலகஅரசாங்கத்தை அமைக்க ஒத்துழைப்பதுதான் விவேகம். அந்த அறிவு வருவது இன்றைய சூழ்நிலையில் சுலபமன்று. ஆகவே ஐக்கிய நாடுகள்சபையைச் சேர்ந்த பல நாடுகளும் சேர்ந்து, இரு வல்லரசுகோஷ்டிகளையும் இவ்வித நாசகார வெறிச் செயல்களில் ஈடுபடாமல் செய்வது ஒன்றுதான், இன்றைய ஆபத்திலிருந்து உலகைக் காப்பாற்றமுடியும்.

# எழுத்தாளர் சமூகத்தின் கண்ணாடி

## பேறிஞர்கள் மரபில் உதித்தவர்கள்

இன்றைய எழுத்தாளர்கள் பேரறிஞர்களின் மரபில் வந்தவர்கள். எழுத்தை மந்திரமாகப் பயில்கிறவர்கள். தந்திரமாகப் பயில்கிறவர்கள் அல்ல. தந்திரமாகப் பயில்கிறவர்களை எழுத்தாளர் என நாம் கொள்வதில்லை. எழுத்தில் கனிவும் அதே சமயம் துணிவும் வேண்டும் இன்று வளர்ந்து முன்னேறியிருக்கும் புதுமை இலக்கியத்தைப் பார்க்கும்போது நாம் உரிமையுடன் பெருமை கொள்ளலாம். புதிய கருத்துக்கள், புதிய புதிய உத்திகளில் கதைகளாகவும் கவிதைகளாகவும் மலர்ந்து வருகின்றன.

எழுத்தாளன் சமூகத்தின் கண்ணாடி, தன்னைச் சுற்றியுள்ளோரின் வாழ்க்கை, பண்பாடு, நாகரிகம், மனப்போராட்டம் இவையே அவன் மூலச் சரக்குகள். நலிந்தவர்களைக் கண்டு அவருக்காக நலிவதும், கொடுமை மலிந்தவர்களைக் கண்டால் அவருக்காகச் சீறுவதும், அவன் இயல்பு நலிவைச் சொன்னாலும் அதன் முடிவில் தன் கதாநாயகன் நல்ல நிலை அடைந்த இரகசியத்தை சொல்லவே எழுத்தாளன் விரும்புகிறான். அவனுடைய பாத்திரங்கள் காதற் களியில் திளைக்கின்றன வறுமைப் பிடியிலும் களிக்கின்றன. மடமைப் பிடியிலிருந்து துடிக்கின்றன! எல்லோரும் எல்லா நலமும் பெற்று வாழவேண்டும் என்பது அவன் அவா, எழுத்தாளன் பிழைத்தால் அந்நாடே பிழைத்தது என்று பொருள்.

### உலகமும் விஞ்ஞானமும்

இன்று உலகம் விஞ்ஞானத் துறையில் மலைப்பூட்டும் வகையில் முன்னேறியிருக்கிறது. உலக நடப்பின் போக்கும் மலைப்புத் தருவதாக மாறியிருக்கிறது. எழுத்தாளர்கள் இவ்விரண்டு துறைகளுக்கும் இன்னும் அதிக வாய்ப்புத் தருதல் வேண்டும். வரலாற்று அறிவு தலையாய ஒன்று. இது குறித்து இன்று யாரும் அதிகமாகச் சிந்திப்பதில்லை. இதுவே நமது படைப்புக்களின் தரத்திற்குப் பெரிய குறையை உண்டாக்கும் என்று தோன்றுகிறது என்கிறார் மூல்க்ராஜ் ஆனந்த, விஞ்ஞானம், வரலாறு ஆகிய துறைகளில் நம் அடித்தளம் இன்னும் வலுவாக அமைய வேண்டும். 'சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்' என்றார் பாரதி, அந்த மகாகவியின் தீர்க்க தரிசனம் இன்று பலித்து விட்டது.

'பிறர் தம் துக்கத்தில் கரைதலும், களிப்பில் மிதத்தலும் இல்லாத எழுத்தாளனின் எழுத்தில் வலிமை பிறப்பதில்லை தான் காணும் மக்களின் பிரதிநிதியாக, அவர்தம் வாழ்வைத் தாம் கண்டவாறு உணர்த்தாத எழுத்து வெற்றி பெறுவதில்லை. நாள்தோறும் எத்தனை மக்கள் வறுமையில் வாடுகிறார்கள், எத்தனை பேர் விறுமையில் வாடுகிறார்கள் என்பதை எழுத்தாளன் காண வேண்டும். கண்டவற்றை எல்லாம் எழுத்தில் படிக்க வேண்டும். அவற்றைப் படிப்போர் மனம் கண்ணீர் வடிக்க 'அக்கண்ணீர் தீயாய் மாறி சமுதாயத்தைப் பற்றிய புன்மைகள் மாயச் சுட்டெரிக்கும் அல்லவா?

### கொள்வன கொள்ளல்

புதியன புகுதல் இயல்பு, பழையன கழிதலும் காலமரபு, ஆனால் பழையனவெல்லாம் பழையன அல்ல. புதியன எல்லாம் புதியனவும் அல்ல, கொள்ளத்தக்கவற்றைக் கொண்டு தள்ளத்தக்கவற்றைத் தள்ளும் தெளிந்த மனநிலையை எழுத்தாளர் பெறுதல் வேண்டும். புலவர் வேறு எழுத்தாளர் வேறு என்ற தாழ்ப்பு நீங்கி இருவரும் ஒன்றுதல் வேண்டும் அது தமிழை வளப்படுத்தப் பெரிதும் உதவுவதாகும்.

* * *

[திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆறுவது மகாநாட்டில் ஆற்றிய உரை.]

# கதிர்காம மடங்கள்

## அகற்றுவது பற்றிய கருத்து

கதிர்காமம், புதன்

கதிர்காமத்திலுள்ள மடங்கள் எல்லாவற்றையும் மாணிக்க கங்கையின் மறுபக்கத்துக்கு அகற்ற வேண்டுமென சில வருடங்களாக நடைபெற்று வரும் முயற்சிகள் குறித்து இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. ஸ்பென்சர் இராசரத்தினம் எழுதுவதாவது:

கதிர்காமத்தில் மொத்தம் இருபத்திரண்டு மடங்களுள. இவற்றுள் பதினறு மடங்கள் ஆரம்பமான காலந் தொட்டு, எம்பெருமான் எழுந்தருளி வரும் வீதியின் மருங்கில் இருந்துகொண்டு, விழாவின் போது சுவாமி பவனி வருகையில் மண்டபப்படிகள் வைத்து அலங்காரமாய்க் கற்பூர ஆராதனைகள் அடியார்களுக்கு ஆனந்தக் காட்சியளித்து வருகின்றன. திருக்கோயிலுள், திரைமறைவில் நடக்கும் கற்பூர ஆராதனையைக் காண முடியாதபடியால் இந்தக் காட்சியே மிக மிக ஆனந்தமளிப்பதாயிருக்கின்றது. மடங்களை எடுத்து விட்டால் இவ்வுரிமையை நாங்கள் இழந்துவிடவேண்டும்.

மடங்களை அகற்ற வேண்டுமென்ற எண்ணத்திற்கு [illegible] பெரும்பாலானவை சிங்களவர்[illegible] புக்கள் மாறுகவிருந்த போதிலும், அவர்கள் முன்வந்து தடைபண்ண இயலாமலிருக்கின்றது. ஆகையால் முழுப் பொறுப்பும் சைவ சமயத்தவராய எங்களுக்கே உரியதாகும்.

எனவே, சைவ மக்கள் தங்களுடைய பட்டினங்கள், கிராமங்களிலுள்ள சபைகளைக் கூட்டி தக்க நியாயங்களுடன் எதிர்ப்புத் தீர்மானங்களை நிறைவேற்றி கௌரவ பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும், உள்ளூராட்சி வீடமைப்பு மந்திரி மகாநாம சமரவீராவுக் கும், அரசினர் நகர அமைப்பாளருக்கும் [illegible] ஆங்கிலத்தில் அனுப்புதல் வேண்டும்.

### ஆசிரியருக்குக் கடிதம்

## கதிர்காமம்

ஸ்ரீ கதிர்காம ஆலயத்தைச் சுற்றியுள்ள இடங்களைப் புனித ஸ்தலமாக்குவது சம்பந்தமாக, பல பத்திரிகைகளிலும் அன்பர்களின் கருத்துக்கள் வெளியாகிவருகின்றன.

கதிர்காமத்தில் நடைபெறும் பல தீய செயல்களைக் குறித்து, மடாலயங்களையும், கடைகளையும் மாற்றி அமைப்பது நலமெனக் கண்டால் எமது கருத்துக்களையும் இங்கு கூறவிரும்புகின்றேன்.

ஆலயத்தின் சுற்று வட்டாரங்களிலும், கடைகளிலும், கள்ளு, சாராயம், கஞ்சா போன்ற லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதும், ஆடு, மாடு, கோழி போன்றவற்றைக் கொன்று புசிப்பதும் உயரிய செயலல்ல. அப்பகுதியில் வசிக்கும் சிலர் இப்படி நடந்துவந்தனர்.

இப்போது இது சர்வசாதாரணமானவிஷயமாய்ப்பழக்கத்துக்கு வந்துவிட்டது. இச்செயலை நீக்குவதற்காக கடைகளையும், மடங்களையும் அப்புறப்படுத்தினால் மட்டும் போதாது.

முன்னையவிட இப்போது கதிர்காமத்தில் ஜனப் பெருக்கம் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதனால்தான் இத் தீய செயல் பெருகிவிட்டதெனக் கூறிவிட முடியாது.

கள்ளு, சாராயம், கஞ்சா முதலிய வற்றைத் தாராளமாக விநியோகிப்பதற்கும், உயிர் வதை, களவு. விபசாரம் போன்ற தீய செயல்கள் பெருகுவதற்கும் காரணம் யாதாக இருக்கலாம் என நாம் ஆராய வேண்டியது அவசியமாகும். கதிர்காமத்தில் இவ்வித செயல்கள் நடைபெறக் கூடியதான அனுமதிகளை அரசாங்கம் அளிக்கவில்லை என்பது எல்லோரும் அறிந்ததொன்று. இவ்வித செயல்கள் தெய்வஸ்தலத்திலே நடைபெருவண்ணம் பாதுகாப்பதும், கட்டுப்படுத்துவதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

இத்தாலியிலிருந்து ஓர் அன்பர் வந்தார். பெயர் ரோபர்ட் பெர்ட்டானி. வயது நாற்பதாம். பார்த்தால் 25 தான் சொல்லலாம். தமக்கு விவாகமாகவில்லை என்றும் அதனால் தான் இளமையாக கவலையின்றி இருப்பதாயும், ஐரோப்பாவிலே மனைவிமார், புருஷனை பொம்மைகளாக ஆட்டி ஆதிக்கம் செலுத்துவதாயும், ஆனால் ஆசிய நாடுகளில் நேர்மாறாக புருஷனே மனைவியை அடக்கி ஆளுவதாகத் தெரிவதாயும் சொன்னார்.

இங்கும் நிலைமை மாறி வருகிறது என்று கூறியதும், ஐரோப்பிய காற்று இங்கும் அடிக்க ஆரம்பித்து விட்டதா என்று சொல்லிச் சிரித்தார்.

* * *

கையில் காசுபணம் கிடையாது இதுவரை 32 நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறாராம்! இந்தியாவில் 5 மாதம் இருந்துவிட்டு, தலைமன்னார் வழியாக லொறியிலே இங்கு வந்ததாகத் தெரிவித்தார்.

இதுவரை பார்த்த நாடுகளில் எது மிகவும் பிடித்திருக்கிறது என்று கேட்டதற்கு, கிழக்கு ஆசியாவிலே மலாயா, இந்தோனேஷியா முதலிய நாடுகளே என்றும் அங்கு சுதந்திரமிருப்பதாகக் கருதுவதாயும் கூறினார்.

இத்தாலியைப்பற்றிக் கேட்டேன். "அங்கு யுத்தத்துக்குப் பின் ஏழ்மை மிக அதிகம். அங்கு சமயமெல்லாம் ஒரு வியாபாரம் போலவே நடக்கிறது. ஆசியா மக்களிடையே உண்மையான பக்தியும் சமய வாழ்வும் இருப்பதைக் காண்கின்றேன். இத்தாலியில் ஜனப் பெருக்கம் அதிகமாக இருப்பதால் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறவேண்டியுள்ளது" என்றார்.

* * *

இந்தியா எப்படி? என்று கேட்டதற்கு, அங்கு ஜன நெருக்கமும் ஏழ்மையும் அதிகமென்றும் ஆனால் மக்கள் அதிக அன்பாக இருப்பதாயும் கூறினார். விசா தொந்தரவுகளைப் பற்றிக் கேட்டேன். 1955ல் ஒருமுறை தான் இப்பகுதிகளுக்கு வந்தாயும், இப்போது அதிக கெடுபிடிகள் இருப்பதாயும், இதெல்லாம் மாறி ஒரே உலக அரசாங்கம் ஏற்படவேண்டுமென்றும் சொன்னார்! ஆனால் அது ஏற்படுவது அவ்வளவு சுலபமா?

இத்தாலியில் கம்யூனிஸம் உண்டா? என்று கேட்டதற்கு, "அதிகமுண்டு. ஏழ்மை, வறுமை இருக்குமிடத்தில், அது இருப்பது இயற்கைதானே" என்றார்.

காசுபணம் எதுவுமில்லாமல் மக்களின் ஆதரவையே நம்பி உலகம் சுற்றுகிறார் இவர். இலங்கையிலேயே தங்கியிருப்பீர்களா? என்று கேட்டதற்கு இங்கு அரசாங்கம் அனுமதிக்காதென்றும், ஆசிய நாடுகளில் ஜன நெருக்கம் அதிகமாதலால், தென்னமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, ஆபிரிக்கா முதலிய நாடுகளில்தான் குடியேற வேண்டுமென்றும் சொன்னார்.

ஆனால் ஆசியா மக்களாகிய நாம், இப்படி வேறு நாடுகளில் சென்று குடியேற நினைக்கவும் முடியுமா? எங்கும் தடைதான்! பிரிட்டனிலும் கூட தடை வருகிறது. சுதந்திரத்துக்குப் பின் தடை அதிகம் இதற்கு என்றுதான் விமோசனமோ!

* * *

காலையில் ஒரு ஆசிரியர் வந்தார். இனி ஆசிரியர்கள் தங்கள் வீட்டில் மாணவிகளுக்கு மாலை வேளைக்குப் பிறகு பாடம் கற்பிக்கக் கூடாதென்று கல்வி டைரக்டர் போட்டுள்ள உத்தரவு தமக்கு மனதில் தைப்பதாயும், ஆசிரியர்களிடையே ஒழுங்குக் கேடுகள் இருப்பதா

(5ம்பக்கம் பார்க்க)

# கல்வித்துறையில் புதிய சகாப்தம்

## மாணவர்களுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கும் கல்வி அவசியம்

## காரைநகர் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் அறிஞர்கள் உரை

காரைநகர், வியாழன்

"பிரிட்டன் போன்ற மேனாடுகளிலுள்ள மாணவர்கள் தொழில் துறைகளில் ஈடுபட்டு உழைப்பது சாத்தியமாகின்றது. இலங்கைத் தேசிய கல்வித்திட்டச் சபையினரும் மேல் நாட்டில் நிலவிவரும் இந்தக் கல்வி முறையைத் தழுவி இந்நாட்டிற்கும் ஒரு கல்வித்திட்டத்தை வகுப்பது நன்று"

இவ்வாறு நேற்று இரவு காரைநகர் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசளிப்பு விழாச் சொற்பொழிவு நிகழ்த்திய முடிக்குரிய நியாயவாதி திரு. டி. முத்துச்சாமிப்பிள்ளை கூறினர்.

சில மாதங்களுக்கு முன்னர் மேல் நாடுகளுக்கு சுற்றுப் பிரயாணஞ் செய்துவிட்டு தாய்நாடு திரும்பிய திரு. முத்துச்சாமிப்பிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது:-

சமீபத்தில் நான் பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் சென்றபோது அங்கு நிலவிவரும் கல்வி முறையைக் கவனிப்பதற்குப் போதிய சர்ந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. மேனாடுகளில் அநேகமாக ஆறு வயது தொடக்கம் பதினன்கு வயது வரை பிள்ளைகளுக்குக் கட்டாயக் கல்வி அளிக்கப்படுகின்றது.

பதினன்கு வயதில் அவர்கள் தொழில் துறையிலோ அன்றேல் வர்த்தகத் துறையிலோ நல்ல பயிற்சி பெறுகின்றனர். நான்கு வருடகாலம் இந்தப் பயிற்சி பிள்ளைகளுக்குக் கிடைக்கிறது. பதினெட்டு வயது நிரம்பியதும் இப்பிள்ளைகளுக்கு ஏதோ ஒரு தொழில்துறையில் பயிற்சிப் பத்திரம் அளிக்கப்படுகின்றது. இதைக்கொண்டு அங்குள்ள மாணவர்கள் தொழில் துறைகளில் ஈடுபட்டு உழைப்பது சாத்தியமாகின்றது.

### சமய அடிப்படையில் கல்வி

இன்னும் ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிடவிரும்புகிறேன். கல்வித் துறையில் இப்போது ஒரு புதிய சகாப்தம் ஏற்பட்டுள்ளது. சமய வாழ்க்கையை இது பாதிக்க மாட்டாதென நம்புகிறேன். சமய அடிப்படையில் வாழ்க்கையமைய வேண்டுமென்பதில் நான் நம்பிக்கையுள்ளவன். எங்கள் பள்ளிக்கூடங்களில் சமய அடிப்படையில் கல்வி அமையவேண்டியது அவசியம்.

கல்லூரி அதிபர் திரு. ஏ. தியாகராசா தமது அறிக்கையில் குறிப்பிட்டதாவது:-

### புதிய சகாப்தம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சபை இந்நாட்டின் ஆங்கிலக் கல்விக்கும் சமயக் கல்விக்கும் ஆற்றிய தொண்டுகள் பல. சென்ருண்டுடன் இச் சபையினரின் சகாப்தம் முடிவடைந்துவிட்டது. இப்போது நாம் ஒரு புதிய சகாப்தத்துட் பிரவேசித்துள்ளோம். அரசாங்கமே பாடசாலைகளைப் பொறுப்பேற்றுள்ளது. ஒரு நாட்டில் பிள்ளைகளுக்குக் கல்வியை ஊட்டும் கடமை அரசாங்கத்தினதேயாகும். ஆதலின் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடத்துதல் மிகப் பொருத்தமுடையது. நிர்வாகச் சிக்கல்கள் பல ஏற்படக்கூடும். கல்வி நிர்வாகம் பகுதிவாரியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. கல்விநிர்வாகத்தில் தகுதியும் அக்கறையுமுடைய கல்விமான்களைக் கொண்ட ஒரு சபையில், குறிக்கப்பட்ட பகுதியிலுள்ள, பாடசாலைகளின் நிர்வாகப் பொறுப்பு விடப்படின், உண்மையில் கல்வி நிர்வாகம் ஒருபடி முன்னேற்றமடையும். பாடசாலைகள் அரசாங்க மயமாக்கப்பட்டபடியால், பெற்ருேருக்கு அதிக பொறுப்பு இல்லையென்று, அவர்கள் வாளா இருத்தல் இயலாது. வருங்காலத்தில் அவர்களுக்குப் பொறுப்பு அதிகம் என்பதையும், அவர்களின் ஒத்துழைப்பு பெரிதும் வேண்டப்படும் என்பதையும் அவர்கள் உணர வேண்டும். எவ்வகையான கல்வித் திட்டத்திலும் மாணவரே முக்கிய அம்சமாகும். மாணவர்கள் தாம் சமுதாயத்தையும் பாடசாலையையும் ஒன்றுபடுத்துபவர்கள்.

### கல்வி அமைப்பு

ஆரம்ப பாடசாலைகளினதும், சிரேஷ்ட பாடசாலைகளினதும் பாட ஒழுங்கிலும் கல்வி அமைப்பிலும் மாற்றங்களைச் செய்வதற்குத் தேசியக் கல்விச் சபையின் அறிக்கையை எதிர்பார்க்கின்ருேம். இந்த இடத்தில் ஒன்று மாத்திரம் கூற விரும்புகிறேன். அது என்னவெனில், ஆரம்ப பாடசாலைகளுக்குப் புத்துயிரளித்தாலன்றிக் கல்வியிற் செய்யப்படும் எம்மாற்றமும் பயனளிக்கக்கூடியதாகவும், நிலையானதாகவும் இராது என்பதாகும். ஆரம்ப பாடசாலைக் கல்விக்கு ஆதாரமான இரண்டு அடிப்படை உண்மைகளைக் கூற விரும்புகிறேன். ஒன்று வெறும் புத்தகக் கல்விக்குப் பதிலாக, மாணவன் சுயமுயற்சியையும், தனக்கு இயற்கையாகவுள்ள ஆற்றலையும் விருத்தி செய்யக்கூடிய வழிகளைக் கையாளுதல். மற்றது பாடங்கள் தனியாகப் பிரிக்கப்படாது, மாணவனது விருத்திக்குரிய ஒழுங்கில் ஒரு பகுதியாக அவனுக்குக் கிட்டவுள்ள சூழுவோடு சேர்க்கப்படவேண்டும்.

பாடசாலைகளில் தாய்மொழி மூலம் கல்வி புகட்டப்படுவது அண்மையிற் செய்யப்பட்ட ஒரு பெரிய மாறுதலாகும். இதன் விருத்திக்கான முயற்சிகள் சொல்லளவிலேயன்றிச் செயலளவிலில்லை. அறிவியல் நூல்களும், எல்லாப் பாடங்களுக்குமுரிய பின்னணி இலக்கியங்களும் தாய் மொழியில் இயற்றப்பட வேண்டும். ஆங்லத்தின் தரம் குறைந்து கொண்டே போகிறது. இக்குறைவை நாம் முயன்று நிறுத்தினலன்றி உயர்தரப் பாடசாலைகளில் கல்வியின் தரம் பெரிதும் பாதிக்கப்படும். பாடசாலைகளைத் தரப்படுத்தல், ஒன்று சேர்த்தல் என்பன பற்றி அதிகம் பேசப்படுகிறது. ஆயின் இவை எல்லாவற்றிலும் சிங்களத்தைப் பெரிதெனக் கொள்ளாது, கல்வி விருத்தியையே பெரிதெனக்கொள்ளவேண்டும்.

திரு. பி. நவரத்தினம் ஸ்தாபகர் ஞாபகார்த்தச் சொற்பொழிவாற்றும்போது ஸ்தாபகரின் வள்ளண்மையையும் இலட்சிய வாழ்க்கையையும் பாராட்டிப் பேசினர்.

திருமதி டி. முத்துச் சாமிப்பிள்ளை பரிசில்களை வழங்கினர். கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

---

## பங்களூரில் பயிற்சி பெற்ற எஞ்ஜினியர்கள்

கொழும்பு, புதன்

இலங்கை அரசாங்க மின்சாரப்பகுதி எஞ்ஜினியர்கள் சிலர் பங்களூரிலுள்ள பிரபல விஞ்ஞானக் கல்லூரியொன்றுக்குப் பயிற்சிக்குச் சென்று திரும்பியுள்ளார்கள். அகில இலங்கைக்குமான மின்சாரத் திட்டமொன்றை அமைக்கும் வகைபற்றி ஆராய்ச்சி செய்வதற்கு இந்த எஞ்ஜினியர் குழு பங்களூர் விஞ்ஞானக் கல்லூரிக்குச் சென்றது. இந்தியாவிலுள்ள அமெரிக்க தொழில்நுட்பக் கூட்டுறவு மிஷன் இப்பயிற்சிக்கு ஒழுங்கு செய்தது. எஞ்ஜினியர்கள் இருவார காலமாக பங்களூரில் பயிற்சி பெற்று இலங்கை திரும்பியுள்ளார்கள்.

---

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் இனி ஆசிரிய சங்கங்கள் தங்கள் உரிமைகளைப் பற்றி பேசுவதைவிட கடமை, பொறுப்பு இவற்றைக் குறித்தே அதிகம் யோசித்து செயலாற்ற வேண்டுமென்றும் தாம் வற்புறுத்தப் போவதாகவும் கூறினர்.

வடக்கே நிலைமை அவ்வளவு மோசமில்லை என்ருலும், மாணவர்கள் நெறிதவருமலிருக்க, ஆசிரியர்களே வழிகாட்ட வேண்டும்.

---

## பண்பற்ற பிக்குகளால் பௌத்தத்துக்கு இழுக்கு

### பௌத்த மதப் பேராசிரியர் கருத்து

நீர்கொழும்பு, புதன்

"பௌத்த மதம் 2260 ஆண்டுகளுக்கு மேலக நிலவிவந்துள்ளது. பௌத்த மக்கள், பொருளாதார நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு பௌத்த சங்கத்தின் நலன்களை நிராகரித்து வருவார்களானல் 2260 ஆண்டுகள் நிலைத்து வந்த பௌத்த சமயம் இந்நாட்டிலிருந்து அழிந்துபட்டுப் போக வேண்டியதுதான்."

இவ்வாறு கொழும்பு வித்தியோதயப் பல்கலைக் கழகத்தின் பௌத்த மதப் பேராசிரியர் ஸ்ரீசித்தார்த்த விமலதர்ம நாயக்கதேரோ அனுக்குருகோறளை சாசன ரக்ஷக மண்டலயாவின் மூன்ருவது வருடாந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

"பௌத்த மக்களிற் பெரும்பான்மையோர் கோரிக்கொண்டதன் பேரில் காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவின் அரசாங்கம் பௌத்த சமயத்தை விருத்தி செய்வதற்கெனப் பிரத்தியேக இலாகா ஒன்றையும் அமைத்தது. பௌத்த மக்களுக்கும் பௌத்த சங்கத்துக்குமிடையே நெருங்கிய தொடர்புகளை உண்டாக்குவது அந்த இலாகாவின் முக்கிய நோக்கமொன்ருகும். 400 வருடகாலமாக அந்நியராட்சிகளின் கீழ் வலிமையிழந்து போன பௌத்த சமயத்துக்கு இவ்வாறுதான் புத்துயிரளிக்க வேண்டும். எமது பிரதமமந்திரியும் ஏனைய மந்திரிகள் பலரும் பௌத்தர்களாக இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். அதனல் எமது சமய விவகாரங்களும் மிகுந்த பாதுகாப்பில் இருக்கின்றன எனலாம். பௌத்த சமயத்துக்கென அரசாங்கம் செய்யும் எதுவும் "பௌத்த விஹாரை முறைகளுக்கேற்பவே செய்யப்பட வேண்டும்.

பௌத்த தர்மங்களை பௌத்த பிக்குகள் கற்று வருவதில்லை. இது கவலைக்குரியது. 30 வருடங்களுக்கு முன்னர் இருந்த பிக்குகளின் பண்புகள் இப்போதைய பிக்குகளிடம் காணப்படுவதில்லை. பிக்குகள் பண்புள்ளவர்களாக இருக்காவிட்டால் பௌத்த சமயமே அதிகம் பாதிக்கப்படும்."

மண்டலயாவின் தலைவர் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினர்.

---

## பிரி - ரஷ்ய பிரதிநிதிகள் சந்திப்பு

நியுயோர்க், அக். 25

ஐ. நா. தலைமைக் காரியதரிசி ஒருவரைத் தெரிவு செய்யும் விஷயமாக நேற்று ஐ. நா. விலுள்ள பிரிட்டிஷ் - ரஷ்யப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர். ஒரு வாரத்தில் இது சம்பந்தமான ஒரு உடன்பாடு ஏற்பட்டுவிடுமெனத் தாம் நம்புவதாய் அமெரிக்க பிரதிநிதி திரு. அட்லாய் ஸ்டீவன்சன் கூறினர்.

---

## ஜப்பானிய மலிவு கார்கள்

ஹாங்காங், அக். 25

இன்னும் 5 வருஷ காலத்தில், உலக மார்க்கெட்டில் ஜப்பானிய கார்கள் போட்டியிடும் என்று ரூட்ஸ் மோட்டார்ஸ் கம்பனியின் நிர்வாக டைரக்டர் ஸ்ரீ பிரியன் ரூட்ஸ் தெரிவித்தார்.

ஜப்பானிய மோட்டார் கார் உற்பத்தி தொழில் விரிவடைந்து வருவதாகவும், மலிவான கார்களைத் தயாரித்து உலகநாடுகளுக்கு விற்பனை செய்ய தீவிர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதென்றும் அவர் சொன்னர்.

---

## மறைந்த தலைவர்களுக்கு ஞாபகார்த்த மண்டபம்

### விசேஷ ஆலோசனைச்சபை இரண்டாவது தடவையும் கூடவில்லை

யாழ்ப்பாணம், வியாழன்

மறைந்த தலைவர்கள் இருவருக்கு ஞாபகார்த்த மண்டபம் நிறுவுவது சம்பந்தமாக மாநகர சபையினல் நியமிக்கப்பட்ட விசேஷ ஆலோசனை சபையின் கூட்டத்திற்கு அச்சபை அங்கத்தவர் எவருமே வராததால் இரண்டாவது தடவையும் கூட்டம் நடைபெறவில்லை.

மறைந்த தலைவர்களான வன்னியசிங்கம், தருமகுலசிங்கம் ஆகியோருக்கு ஞாபகார்த்த மண்டபம் அமைப்பது சம்பந்தமான ஆலோசனையைக் கூற மாநகரசபையினல் நால்வர் கொண்ட விசேஷ ஆலோசனை சபையொன்று தெரிவு செய்யப்பட்டது. இச்சபையில் எம். எம். ஸி.க்களான திருவாளர்கள் ஏ. துரைராஜசிங்கம், என். தேவபாலசுந்தரம், என். டி. செல்லத்துரை, டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் ஆகியோர் அங்கம் வகிப்பதாகத் தெரிகிறது.

பலரின் முறையீடுகள் காரணமாகச் சில வாரங்களுக்கு முன் இச்சபைக் கூட்டம் கூட்டப்பட்ட போதும் எவரும் சமுகமளிக்காதபடியால் ஒத்தி வைக்கப்பட்டது. செவ்வாய்க்கிழமை இரண்டாவது தடவையாகக் கூட்டப்பட்டிருந்த போதும் ஞாபகார்த்த மண்டபம் அமைக்கும் ஆலோசனைக் கூட்டத்துக்கு எவருமே வரவில்லையாம். இவ்விஷயம் இப்பொழுது மேயரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

---

## ஆசிரியரிக்கு..

(4ம் பக்கத்தொடர்ச்சி)

கதிர்காமத்தில் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் சகோதரர்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் சீர்திருத்தத் தொண்டர்கள் பலர் இருந்தே வருகின்ருர்கள். பக் ஆண்டுகளாக பது ளை சமத்துவ சங்கம் சேவை செய்து வந்துள்ளது.

மடாலயங்களிலுள்ள சில பெரியார்கள் ஒருங்கு சேர்ந்து இதில் சீர்திருத்தங்களைச் செய்ய முடியும்.

இதற்கான உதவிகளை அரசாங்கம் அவ்வப்போது செய்யுமானல், மடாலயங்களையோ, குடியிருப்பவர்களையோ மாற்றி அமைக்க வேண்டிய நிலைமை ஏற்படாதென எண்ணுகிறேன்.

டாக்டர். ஏ. வி. சுப்பிரமணியம்
132, மாத்தளை ரோட்,
வத்துகாமம்.

---


## திருமண அழைப்பு

மணமகன்: திரு. ஸ்ரீபாஸ்கரன் B. A.
[மயிலிட்டி கிராமச் சங்கத் தலைவர்; தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர்]

மணமகள்: செல்வி பாலாம்பிகை B. SC.
[வீமன்காமம் ஆங்கில பாடசாலை ஆசிரியை]

காலம்: 28—10—61 சனிக்கிழமை முற்பகல் 10-35—11-35 மணி.

இடம்: மணமகள் இல்லம், மல்லாகம்.

வரவேற்பு: மணமகள் இல்லத்தில் 29-10-61 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4—8 மணி. நண்பர்களையும், உறவினரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

சி. சுவாமிநாதன்,
தம்பதிகள்,
மயிலிட்டி.

அ. சரவணமுத்து,
தம்பதிகள்,
மல்லாகம்.

# பகவானின் நாமம் மனச்சாந்தி அளிக்கும்

## கதிரேசன் ஆலயவிழாவில் பேச்சு

வத்துகாமம், புதன்

வத்துகாமம் சைவாபிமானிகள் சங்க ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில், நவக்கிரகஸ்தாபன வருடாந்தவிழாவை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை அன்னதானமும், சைவசமய சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

திரு. குமாரசிவம் கூட்டுப்பிரார்த்தனை நடத்தினார். ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா பேசும்போது குறிப்பிட்டதாவது:

இன்று நம் மக்கள் கடவுளின் நாமத்தை உரக்க உச்சரிக்கவே வெட்கப்படுகிறார்கள்.

முதல் முதல் கோஷங்கள் ஏற்பட்டதே கோவில்களில் தான். இக்காலத்தில் சாதாரணமாக கட்சிக் கூட்டங்கள் நடக்குமிடங்களில், ஒழிக, வாழ்க, ஜே என்றெல்லாம் கோஷமிட நம்மவர்கள் தயங்குவதில்லை.

மனச்சாந்திக்காக நாம் பகவானின் நாமத்தை உச்சரிக்க வேண்டும். அடிக்கடி பகவானின் நாமத்தை உச்சரிப்பதால் உள்ளம் தூய்மை அடைகிறது. இது அனுபவத்தில் கண்டவைகள்.

கூட்டுப்பிரார்த்தனை செய்வதால் நடமாடும் தெய்வங்களாகிய மனித சமுதாயத்திலே ஒற்றுமை ஏற்பட்டு அன்பு சுரக்கும்.

மற்றும் பலரும் பேசினர்.

# யாழ்ப்பாண பாடசாலை உதைபந்தாட்டம்

## கடந்த வருட 'சம்பியன்ஸ்' தோல்வி

சென்ற வருடம் முதலாம் கோஷ்டி 'ஏ' பிரிவு உதைபந்தாட்ட சம்பியன்ஸ் ஆக வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சென்ற வெள்ளிக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியிடம் 3-1 கோல்களால் எதிர்பாராத விதமாக தோல்வியடைந்திருக்கிறது. எனவே இவ்வருடம் 'ஏ' பிரிவு சுற்றுப் போட்டியில் முதலாம் பிரிவு ஆட்டங்களில் முதலிடம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு அல்லது மகாஜனக் கல்லூரிக்கு கிடைக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இரண்டாம் பிரிவில் மத்திய கல்லூரி யூனியன் கல்லூரியிடம் தோல்வியடைந்திருப்பதால் முதலிடம் யூனியன் கல்லூரிக்கு அல்லது பரமேஸ்வராக்கல்லூரிக்குக் கிடைக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

முதலாம் கோஷ்டி 'பி' பிரிவுச் சுற்றுப் போட்டிகளில் முதலாம் பிரிவில் முதலிடம் நடேஸ்வரக் கல்லூரிக்கு அல்லது சிதம்பரக் கல்லூரிக்குக் கிடைக்கலாம் என்றும் இரண்டாம் பிரிவில் முதலிடம் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரிக்கு அல்லது உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்குக் கிடைக்கலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை வரை முடிவடைந்த ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் 1 ஸ்ரீசோமஸ்கந்தா 1, சிதம்பரக் கல்லூரி 2 கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 0, யாழ். மத்திய கல்லூரி 5 மானிப்பாய் இந்துக் கல்லூரி 0, யாழ். இந்துக் கல்லூரி 1 உரும்பிராய் இந்துக் கல்லூரி 1, பரமேஸ்வரா கல்லூரி 0 யூனியன் கல்லூரி 0, மகாஜனக் கல்லூரி 1 ஸ்கந்தவரோதயக் கல்லூரி 1, சிதம்பரக் கல்லூரி 2 விக்னேஸ்வரக் கல்லூரி 0, உரும்பிராய் இந்து 2 கொக்குவில் இந்து 0, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் 7 சாவகச்சேரி இந்து 3, ஸ்கந்தவரோதயா 3 உரும்பிராய் இந்து 2, கோப்பாய் கிறிஸ்தியன் 2 விக்னேஸ்வரா 1, கொக்குவில் இந்து 3 யாழ்ப்பாணம் இந்து 1, ஸ்ரீசோமாஸ்கந்தா 3 காரைநகர் இந்து 0, யூனியன் கல்லூரி 3 யாழ். மத்திய கல்லூரி 2.

17 வயதுக்குட்பட்ட இரண்டாம் கோஷ்டியினரிடையே நடைபெற்ற ஆட்டங்கசில வற்றின் முடிவுகள் வருமாறு:

ஸ்கந்தவரோதயா 10 யூனியன் கல்லூரி 0, மகாஜனக் கல்லூரி 7 சாவகச்சேரி இந்து 0, ஸ்கந்தவரோதயா 3 பரமேஸ்வரா 1, காரைநகர் இந்து 0 யூனியன் கல்லூரி 0, யாழ். மத்திய கல்லூரி 3 சாவகச்சேரி இந்து 0, கொக்குவில் இந்து 5 உடுப்பிட்டி அமெரிக்கன் 1.

முதலாம் கோஷ்டி ஆட்ட நிகழ்ச்சிநிரல்:

யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கும் முதலாம் கோஷ்டி ஆட்டங்கள் வருமாறு:- (முதல் ஆட்டம் பி. ப. 3-30க்கும் இரண்டாம் ஆட்டம் பி. ப. 4-30க்கும் ஆரம்பிக்கும்.)

அக்டோபர் 25 புதன்: பி.ப. 4-30 உரும்பிராய் இந்து—மகாஜனை.

அக்டோபர் 27 வெள்ளி: விக்னேஸ்வரா—ட்றீபேக் கல்லூரி. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் — காரைநகர் இந்து.

அக்டோபர் 28 சனி: யூனியன் கல்லூரி — மானிப்பாய் இந்து. யாழ். மத்திய கல்லூரி —பரமேஸ்வரா.

அக்டோபர் 29 ஞாயிறு. மகாஜனக் கல்லூரி—கொக்குவில் இந்து. யாழ்ப்பாணம் இந்து—ஸ்கந்தவரோதயா.

அக்டோபர் 30 திங்கள்: ஸ்ரீசோமாஸ்கந்தா — சாவகச்சேரி இந்து. வைத்தீஸ்வரவித்தியாலயம்—காரைநகர் இந்து

நவம்பர் 3 வெள்ளி: நடேஸ்வரா—கோப்பாய் கிறிஸ்ரியன். கொக்குவில் இந்து—ஸ்கந்தவரோதயா.

நவம்பர் 4 சனி: ட்றீபேக் கல்லூரி—சிதம்பரக் கல்லூரி. யாழ்ப்பாணம் இந்து—மகாஜனை.

நவம்பர் 5 ஞாயிறு: பி. ப 4-30 வைத்தீஸ்வரா — உடுப்பிட்டி அமெரிக்கன்.

14-10-61ல் நடைபெறவிருந்த ட்றீபேக் — நடேஸ்வரா, பரமேஸ்வரா — மானிப்பாய் இந்து ஆகிய இரண்டு ஆட்டங்களும் பின்போடப்பட்டுள்ளன. இவை எப்பொழுது நடைபெறும் என்பது அறிவிக்கப்படவில்லை. இந்த ஆட்டங்கள் நடைபெற்ற பின்னரே இறுதி ஆட்டங்கள் நவம்பர் 10, 11 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

# கையும்மெய்யுமாய்ப் பிடிபட்ட மிளகாய் திருடன்

## ரூ. 50 பிணையில் செல்ல அனுமதி

தெல்லிப்பளை, புதன்

அச்சுவேலி வாசியான ஆறுமுகம் கதிர்காமத்தம்பி என்பவர் கடந்த திங்கட்கிழமை காலை சுன்னாகச் சந்தையில் 28 ரூபாய்க்கு 78 இருத்தல் பச்சை மிளகாயை விலைக்கு வாங்கினார். அதனைச் சாக்கிலிட்டு வீட்டிற்குக் கொண்டு போவதற்காக பஸ் நிலையத்தில் வைத்துக் கொண்டு பஸ்ஸிற்காகக் காத்து நின்றார்.

அங்கு நடமாடிக் கொண்டிருந்த சபாபதி இராசையா என்பவர் கதிர்காமத்தம்பி வைத்த மிளகாய்ச் சாக்கைத் திருடிக் கொண்டு ஓட்டம் பிடித்தார். இவரைத் தொடர்ந்து கதிர்காமத்தம்பி ஓடினார். இராசையாவை பொலிஸ் சார்ஜன்ட் வீரவாகு தடுத்து நிறுத்தினார். கதிர்காமத்தம்பியும் அவ்விடம் வந்துசேரவே திருட்டு அம்பலமாகியது.

இத்திருட்டுச் சம்பந்தமாக மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் சபாபதி இராசையா ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி அவரை 50 ரூபா பிணையிற் செல்லுமாறு உத்தரவிட்டு இம்மாதம் 31-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

# கல்லால் அடித்து கத்தியால் வெட்டினர்

## இருவர் விடுதலை; மூவருக்கு அபராதம்

தெல்லிப்பளை, செவ்

கட்டுவனைச் சேர்ந்த கந்தையா கணபதிப்பிள்ளை, மாப்பாணர் தில்லையம்பலம், கந்தையா செல்லத்தம்பி, கந்தையா சிவலிங்கம், கந்தையா நவரத்தினம் ஆகிய ஐவரும் கடந்த ஏப்ரல் மாதம் 15-ம் திகதி கட்டுவனில் வைத்து ஏழாலை வாசியான சுப்பிரமணியம் சின்னத்துரை, சுப்பிரமணியம் இராசையா ஆகிய இருவரைக் கொடுவாக்கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியதாகவும், சுப்பிரமணியம் இராசையாவைக் கல்லால் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் இன்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

முதலாவது எதிரியான கணபதிப்பிள்ளை, மூன்றாவது எதிரியான செல்லத்தம்பி, நான்காவது எதிரியான சிவலிங்கம் என்பவர்கள் தமக்குத் திடீரென் ஏற்பட்ட ஆத்திரம் காரணமாக கேற்படி குற்றங்களைப் புரிந்ததாக ஒப்புக் கொண்டனர்.

நீதிபதி இரண்டாவது எதிரியையும் ஐந்தாவது எதிரியையும் விடுதலை செய்து ஏனைய மூன்று எதிரிகளையும் தலா 250 ரூபா அபராதம் செலுத்துமாறும் கட்டளையிட்டார்.

# தொழிலாளருக்கு காணியைப் பிரித்துக் கொடுக்க முன்வந்தார்

## தோட்ட முதலாளியின் பெருந் தன்மை

நாவலப்பிட்டி, புதன்

தொளபாகையைச் சேர்ந்த ஈ....பத்தை தோட்டம் அப்பகுதியில் பெரிய தோட்டமாகும் இதன் சொந்தக்காரர் திரு. ஏ. பி. எஸ். டி. பொன்னம்பலம்பிள்ளை மிகவும் தாராளப் பண்மையுடன் அத்தோட்டத்தில் வசிக்கும் இலங்கை பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கும், இலங்கையரான சிங்கள மக்களுக்கும், அவர் தோட்டத்தில் பயிரிடாத பகுதி நிலங்களை ஒரு ஏக்கர் முதல் ஐந்து ஏக்கர் வீதம் ஒவ்வொருவருக்கும் பிரித்துக் கொடுப்பதற்கு தனக்கு அனுமதி தரவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார். இது விஷயத்தில் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனும் சிரத்தை எடுத்து வெகு சீக்கிரத்தில் பிரித்துக் கொடுக்க ஆவன செய்யவேண்டும் என்றும் யூனியன் பிரமுகர்களையும் கேட்டிருக்கிறார். லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் நாவலப்பிட்டி ஜில்லா, சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுக்கும், பகுதி பாராளுமன்ற அங்கத்தவருக்கும் கடிதத் தொடர்பு கொண்டிருக்கிறது.

# மொலட்டோவ் மீது கோஸிஜின் கண்டனம்

மாஸ்கோ, அக். 24

ரஷ்ய முதலாவது உதவிப் பிரதமர் கோஸிஜின் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸில் பேசுகையில் மாஜி வெளி விவகார மந்திரி மொலட்டோவும் இதர கட்சி விரோதிகளும் முற்போக்குக்கு முற்றிலும் புதியவர்கள் என்று குறிப்பிட்டார்.

# டாக்டர் ராதாகிருஷ்ணன்

மியூனிச், அக். 25

ஜெர்மனியில் 4 தினங்கள் சுற்றுப்பிரயாணம் செய்த பின் இந்திய உப ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், இன்று புதுடில்லிக்குப் பயணமானார். மியூனிச் நகரில் டாக்டர் ராதாகிருஷ்ணனைக் கௌரவிக்கும் பொருட்டு நகர மண்டபத்தில் மேயர் ஒரு வரவேற்பு நடத்தினார். இங்குள்ள இந்திய மாணவர்களையும் அவர் சந்தித்துப் பேசினார்.

# வகுப்புவாதத்தை ஒழிக்க தக்க கல்வி வேண்டும்

—நேரு

பம்பாய், அக். 24

படித்த பண்டிதர்களிடையேயும் இன்று வகுப்புவாதம்காணப்படுகிறது. அவர்கள் வகுப்புவாதத்துக்காளாகிவிடுகிறார்கள். தக்க கல்வி மூலமே நாம் வகுப்புவாதத்தை ஒழிக்கலாம் என இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் பாரதப்பிரதமர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:

உண்மையான கல்வி வகுப்புவாதத்திற்கு அப்பாற்பட்டது. சரியான கல்வியைப் போதிப்பதாலேயே நாட்டில் வகுப்புவாதத்தை ஒழிக்கலாம். இன வேற்றுமைகளை அகற்றக்கூடிய முறையில் கல்வி போதிக்கப்பட வேண்டும்.

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

...ன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே

...த்தியால அதிக உத்தரவாத சேவை

...ளிப்பதும் இதுவே

சக்தி பலம்




...விநியோகஸ்தர்கள்:
- ... கொழும்பு.
- எம். கே. ஏ. ...அன் கோ, குருநாகலை.
- என். எச். குமாரசிங்க அன் கோ, காலி.
- ... ஹார்ட் வெயார், இரத்தினபுரி.
- யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்
- எச். ஏ. பகல்ராவல அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். கே. பீட்டர் அப்பு அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். ஏ. செல்லநாயகம் அன் சன்ஸ் மட்டக்களப்பு.

...பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

# கீரிமலைக் கடலில் மிதந்த பெண்ணின் பிரேதம்

## தற்கொலையெனத் தீர்ப்பு

மாவிட்டபுரம், புதன்

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்தபொன்னம்மா தில்லைம்பலம் என்னும் பெண்மணியின் பிரேதம் கீரிமலைக் கேணிக்கு கிழக்கே 15 அடி தூரத்தில் கடலில் மிதந்ததைத் தொடர்ந்து வலி–வடக்கு மரணவிசாரணை அதிகாரி பிறின்ஸ். ஆர். இராசேந்திரா ஸ்தலத்தில் மரண விசாரணை நடத்தினர். சாட்சிகளைக் காங்கேசன் துறை பொலிசைச்சேர்ந்த சார்ஜண்ட் எஸ். பாக்கியநாதன் அதிகாரி முன் ஆஜர் செய்தார்.

பிரேதத்தை முதலில் கண்ட கீரிமலைக் கேணி காவலாளியான திரு கே. சின்னத்துரை சாட்சியமளிக்கையில் தான் வழக்கம்போல் கேணிக்கு அதிகாலை 4-30 மணியளவில் வந்ததாகவும் தனது வழக்கமான கடமைகளைச் செய்தபின் காலை 5-25 மணி அளவில் கடற்கரையை நோக்கிச் சென்றதாகவும் அப்பொழுது ஒரு பெண்ணின் பிரேதம் கடலில் மிதப்பதைக் கண்டதாகவும் அப்பொழுது தன்னுடன் வேறு ஒருவரும் இருக்கவில்லையெனவும் அதிகாலை 4-30 மணியளவில் இராணுவத்தினர் ஒரு ஜீப் வண்டியில் வந்து குளித்துவிட்டுச் சென்றதாகவும் பிரேதம் யாருடையதென தனக்குத் தெரியாதெனவும் பிரேதம் முழங்கால் அளவு தண்ணீரில் மிதந்ததாகவும் கூறினர்.

அடுத்ததாக சாட்சியம் அளித்த கார்த்திகேசு தில்லையம்பலம் சாட்சியம் அளிக்கையில் இறந்தவர் தனது மனைவி என்றும், அவருக்கு 60 வயது என்றும், அவர் கடந்த 20 வருடங்களாக தொய்வால் கஷ்டப்பட்டு வந்ததாகவும், சென்ற சிலதினங்களாக நோய் கடுமையாக இருந்ததாகவும் சென்ற ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில் பொன்னம்மா தான் காங்கேசன் துறை ஆஸ்பத்திரிக்கு சென்று அங்கிருந்து வைத்தியம் செய்யப்போவதாகக் கூறிவிட்டு தன்னிடம் 2 ரூபாய் வாங்கிக்கொண்டு புறப்பட்டதாதவும், தானும் உடன்வருவதாகக்கூற பொன்னம்மா மறுத்ததாகவும் கூறினர்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் இன்று காலை (திங்கள்) 5 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டு பஸ்ஸில் ஆஸ்பத்திரிக்குப் போய் மனைவியைத் தேடினேன். மனைவி அங்கு இல்லை. அங்கு உள்ளவர்களை விசாரித்தேன். அவர்கள் அங்கு எனது மனைவி வரவில்லை என்று கூறினர்கள். நான் திரும்பிப்போய் கீரிமலையில் உள்ள மடங்களில் தேடிவிட்டு கேணிப் பக்கம் சென்றேன். அங்கு பொலிஸ் அதிகாரிகள் நின்றூர்கள். அவர்களுக்கு கிட்டப் போய் பார்த்தபோது மனைவி இறந்து கிடக்கக் கண்டேன்.

மரண விசாரணை அதிகாரியின் கேள்விக்குப் பதிலளிக்கையில் ஆஸ்பத்திரிக்குப் போகும் பொழுது நகைகளைக் கழற்றி வைத்து விட்டுச் செல்வதாகவும், மனைவியும் தானும் தாலிக் கொடியை நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குக் கொடுத்துவிட்டதாகவும் நோய் மாற வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே கோவிலுக்கு காணிக்கையாகக் கொடுத்ததாகவும் மனைவி தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் இருக்கவில்லை என்றும் கூறினர். ஆனல் சில மாதங்களுக்கு முன்னர் டாக்டர் சாக்கோவிடம் சென்று ஊசி மூலம் தன்னைக் கொல்லும்படி கேட்டதாகவும் தனது மனைவி நோயைத் தாங்கமாட்டாமல்தான் தற்கொலை செய்து கொண்டதாக நினைப்பதாகவும் கூறினர்.

பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் அருளம்பலம் பொன்னம்மா நீரில் மூழ்கி மூச்சுத் திணறி மரமானதாகவும் அவரின் முகத்தில் காணப்பட்ட காயங்கள் கடல் பாறைகளில் மோதுண்டதால் ஏற்பறடதென்றும் கூறினர்

மரண விசாரணை அதிகாரி தமது தீர்ப்பில் நோய் காரணமாகக் கடலில் மூழ்கித் தாகொலை செய்து கொண்டதற்கத் தீர்ப்புக் கூறினர்.

## கிராமச்சபைக் கூட்டம்

உடுப்பிட்டி, செவ்வாய்

"குறைந்த செலவில் கட்டைவேலி கிராமச்சபைப் பகுதியிலுள்ள கால்வாய்கள், ஒழுங்கைகள், வடிகால்கள் ஆகியவற்றைச் சீர்திருத்திவைத்தால், மழைகாலங்களில் வெள்ளமேற்படுவதையும் ஆதலல் நூற்றுக்கணக்கான குடும்பங்களின் வாழ்க்கைச் செலவு பணத்தையும் வீடுகட்ட நட்டஈடு கொடுக்கும் பணத்தையும் மீதப்படுத்துவதுடன், அரசாங்கத்திற்கு வீண் சிரமத்தைக் கொடுப்பதையும் தவிர்க்கலாம்" எனசெவ்வாய்க் கிழமை நடைபெற்ற கட்டைவேலிக் கிராமச்சங்கக் கூட்டத்திற்பேசிய உறுப்பினர் திரு. எஸ். ஜெயசிங்கம் கூறினர்.

தலைவர் திரு. இ. சச்சிதானந்தத்தின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. ஜெயசிங்கம் கடந்த மழைகாலத்தில் மூன்று நாட்களுக்கு முன் குழந்தை பெற்ற ஒரு பெண் வெள்ளம் காரணமாக அப்புறப்படுத்தப்பட்ட பரிதாப நிகழ்ச்சியொன்றையும் குறிப்பிட்டார்.

கட்டைவேலிப் பகுதியிலுள்ள எல்லாக் கால்வாய்களையும் உடனடியாத் திருத்தப் பணம் ஒதுக்கப்பட்டது.

## உதைபந்தாட்ட முடிவுகள்

உடுப்பிட்டி, புதன்

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கும், நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்திற்கு மிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் ஒவ்வொரு கோஷ்டியும் தலா ஒருகோல் போட்டு, வெற்றி தோல்வியின்றி வெளியேறின.

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கும், கரவெட்டி திருஇருதயக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் தேவரையாளி 6 கோல்கள் போட்டு வெற்றியீட்டியது.

## பண்ணாகம் பொன்னாலையை வென்றது

சுழிபுரம், புதன்

பண்ணாகம் தெற்கு வாலிப சங்கத்துக்கும் பொன்னாலை இளைஞர் மன்றத்துக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமானகைப் பந்தாட்டப் போட்டியில் பண்ணாகம் கோஷ்டி 3-0 ஆட்டங்களால் பொன்னாலை இளைஞர் மன்றத்தைத் தோற்கடித்தது.

பண்ணாகம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. பொ. தருமலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# திருமலையில் தமிழ்ப்பல்கலைக் கழக விவசாயப் பகுதி

## ஸ்தல பிரதிநிதியை நியமனம் செய்ய முடிவு

திருக்கோணமலை, புதன்

தமிழ்ப்பல்கலைக்கழகத்தினர் திருமலையில் தொடங்கவிருக்கும் விவசாயப்பகுதியின் ஆரம்பவேலைகளைக் கவனிக்க என ஸ்தலப்பிரதிநிதி ஒருவரை நியமிக்க முடிவுசெய்துள்ளனர். ஓர் ஓய்வு பெற்ற அரசாங்க சேவையாளரையே பெரும்பாலும் இப்பதவிக்கு நியமிக்கப்படக்கூடும்.

சர்க்கியூட் பங்களா ஒன்றும் விவசாயப்பகுதி நிறுவப்படும் இடத்தில் கட்டுவதற்கு தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினர் தீர்மானித்துள்ளனர். இதற்கான டென்டர்களை திருமலையிலுள்ள கொந்தராத்துக்காரர்களுக்குத்தான் விநியோகிப்பது எனவும் இயக்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

## கல்லூரியில் ஐ. நா. தினம்

திருக்கோணமலை, புதன்

ஐக்கிய நாடுகள் தினம் திருமலை இந்துக்கல்லூரி மாணவிகள், ஆசிரியர்களால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். அம்பலவாணர் தலைமைதாங்கிப் பேசுகையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சரித்திரம், வளர்ச்சி முதலியவைபற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். இந்துக்கல்லூரி மாணவர்களும் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய பாஷைகளில் செற்பொழிகள் நிகழ்த்தினர்.

## அராலி கிராம முன்னேற்றச் சங்கம்

வட்டுக்கோட்டை, புதன்

அராலி தெற்குக் கிழக்குக் கிராமமுன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. வே. கணபதிப்பிள்ளை தலைமையில் அராலி சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் 'நாடு முன்னேறும் வழி' பற்றிப் பேசினர்.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பெற்றனர். தலைவர்: திரு. வி. நாகலிங்கம், உப-தலைவர்கள். திரு. இ. கந்தமுத்து, திரு. வே. ஐயாத்துரை, காரியதரிசி: திரு: ச. நடராசா, உப காரியதரிசி: திரு. க. சபாரத்தினம், தனதிகாரி: திரு. க. சின்னத்துரை. நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## மாட்டுவண்டியில் வந்த அங்கத்தினர்

உடுப்பிட்டி, புதன்

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற கட்டைவேலிக் கிராமச்சபை மாதாந்தக் கூட்டத்திற்கு ஏனைய 24 வட்டார அங்கத்தவர்களும் கார், சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் மழைக்கோட்டு முதலியன சகிதம் வந்து சேர்ந்தார்கள். ஆனல் 25 வது அங்கத்தவரான நெல்லியடி வட்டாரப் பிரதிநிதி திரு கே. கிருஷ்ணபிள்ளை கூடாரமிட்ட மாட்டுவண்டியில், தோளில் ஒரு சால்வைத்துண்டுடன் வந்திறங்கி எல்லாருக்கும் சிலநிமிடநேர நகைச்சுவைக்குச் சந்தர்ப்பமளித்தார்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வியாழன் 27-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை. 8-00 கோட்டுவாத்தியம், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், -00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 தமிழ்மூலம் சிங்களம் - 5, 7-15 நேயர்விருப்பம், 7-45 'டாக்டர் இரஞ்சிதம்' - தொடர்நாடகம் 1, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 தேர்ந்த இசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 9-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 டி. கே. வல்லபை - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 டி. கே. வல்லபை - பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல்இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-45 ராகம், தானம், பல்லவி எஸ். நரசிம்மலு - பாட்டு, 8-30 டெல்லிஅஞ்சல், 8-40 திரைப்படஇசை, 9-15 ரேடியோ நாடகஇசை.

## மூன்று புதிய உலக சாதனைகள்

பரிதிவட்டம் எறிதல் நிகழ்ச்சியில் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஜே சில் வெஸ்டர் 9-9-61 இல் 210 அடி 2 1/2 அங்குல தூரம் வீசி தமது பழைய சாதனையை 11 அடி தூரத்தில் முறியடித்தார்! உலகில் முதன் முதலாக பரிதிவட்டத்தை 200 அடி தூரத்திற்கு மேல் வீசிய பெருமை இவருடையதேயாகும். 11-8-61, 20-8-61 ஆகிய தினங்களில் முறையே 198 அடி 8 1/4 அங்குலம், 199 அடி 2 1/2 அங்குலம் ஆகிய உலக சாதனைகளை இவர் நிலைநாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கான பரிதி வட்டம் வீசும் நிகழ்ச்சியில் ருஷ்யாவைச் சேர்ந்த தாமரா பிறெஸ் என்ற வீரமணி 20-9-61 இல் 193 அடி 6 அங்குல தூரத்திற்கு எறிந்து 1-9-61இல் தான் ஏற்படுத்திய சாதனையை மூன்று அடி தூரத்தால்முறியடித்துள்ளார்.

இவருடைய சகோதரியாகிய ஜரினு பிறெஸ் 9-10-61ல் பெண்களுக்கான 'பென்ரத்லன்' (Pentathlon ஐந்து நிகழ்ச்சிகளுக்கு மொத்தமாக புள்ளிகள் பெறுதல்) நிகழ்ச்சியில் 5137 புள்ளிகளைப் பெற்று ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார். 17-10-60ல் 4972 புள்ளிகளை எடுத்து உலக சாதனையை ஏற்படுத்திய இவர் சில மாதங்களுக்கு முன் 5020 புள்ளிகளை எடுத்திருந்தார். ஆனல் சர்வதேச அமெச்சூர் விளையாட்டுச் சம்மேளனத்தால் இது இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னாட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

• டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்றீஸ்லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்
J.D. 3.

# மராமத்து இலாகாவின் அசமந்தப் போக்கு

## அறிக்கை சமர்ப்பிக்க மந்திரி உத்தரவு

கொழும்பு, புதன்

மந்திரியால் அங்கீகரிக்கப்பட்ட மராமத்து இலாகாவின் பல திட்டங்களுக்கான வேலைகள் இன்னும் அமுல் நடத்தப்படாமலிருக்கின்றன என பல எம். பி.க்கள் புகார் தெரிவித்ததின் விளைவாக போக்கு வரத்து மராமத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லே நடவடிக்கையெடுத்துக் கொண்டிருக்கிறார்.

கடந்த சில மாதங்களாக மராமத்து இலாகா மேற்கொண்டுள்ள திட்டங்கள்பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு மந்திரி தமது நிரந்தரக் காரியதரிசியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மராமத்து இலாகா டைரக்டரையும், அவரது வேலைகள் பற்றி அறிவிக்குமாறு மந்திரி கோரியிருக்கிறார்.

## கென்னடிக்கு அடினோர் கடிதம்

பொன், அக். 25

மேற்கு ஜெர்மன் அதிபர் அடினோர் ஜனதிபதி கென்னடிக்கு பெர்லின், ஜெர்மனி விஷயமாக ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். கடந்த திங்கட்கிழமை பிரெஞ்சு ஜனதிபதி டிகாலும் திரு. கென்னடிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளாராம்.

—

கொழும்பு, புதன்

பிரான்ஸில் இலங்கைஸ்தானிகராகக் கடமையாற்றும் திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தனவை லண்டனில் இலங்கை ஹைகமிஷனராக நியமிப்பதென இலங்கை அரசாங்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் கலந்து ஆலோசித்துத் தீர்மானித்துள்ளது.

# பிண்ணுக்கு ஏற்றுமதிசெய்ய 'லைசன்ஸ்'

கொழும்பு, புதன்

பிண்ணுக்கு ஏற்றுமதி செய்வதற்கு 'லைசன்ஸ்' பெற்றுக் கொள்ள வேண்டுமென நேற்றிரவு வெளியான கஸட்டில் காணப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு பிண்ணுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஏற்கெனவே ஒப்பந்தம் செய்துகொண்டவர்கள் இதுபற்றிய விபரங்களை ஒருவாரத்துக்குள் ஏற்றுமதிஇறக்குமதி கன்ட்ரோலருக்கு தெரிவிக்கவேண்டும்.

—

## மேரிவலேயில் நவராத்திரி விழா

நாவலப்பிட்டி, புதன்

நாவலப்பிட்டியைச் சேர்ந்த மேரிவலேத் தோட்டத்தில் சமீபத்தில் புதிதாகக் கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் நவராத்திரி விழா நடைபெற்றது. தோட்டப் பாடசாலை ஆசிரியர் திரு. தி. தேவசாமி ஐயர் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தினார். கடைசித் தினமான விஜயதசமியன்று ஆத்மஜோதி ஆசிரியர் திரு. முத்தையா தேவி வழிபாட்டின் மகிமைகளைப் பற்றி உரை நிகழ்த்தினர்.

# செனெட்டர்கள் தெரிவு

## இன்று அரசாங்கக் கட்சி தீர்மானிக்கும்

கொழும்பு, புதன்

அரசாங்கப் பாராளுமன்றக் கட்சி நாளைக் காலை கூடி செனட் நியமனம் பற்றி ஆராயும். இக் கூட்டத்தில் செனட் சபைக்கு தெரிவுசெய்யப்படும் பிரமுகர்களின் பெயர்களைப் பிரதமர் சிபார்சு செய்வார். அரசாங்க எம். பி. க்கள் தெரிவுசெய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் மூவரைமட்டும் சிபார்சு செய்வாரா, அல்லது அதிகமானவர்களின் பெயர்களை சிபார்சுசெய்து கட்சியின் தீர்மானத்துக்கு விடுவாரா என்பது தெரியவில்லை.

—

## சேமிப்பு நிதியில் அரசாங்கத்துக்கு கடன்

கொழும்பு, புதன்

பெரும்பாலும் அரசாங்க சேவையாளர்களின் சேமிப்பு நிதியிலிருந்தே இலங்கை மத்திய வங்கி, சென்ற மாதம் இரண்டு கோடி ரூபாயை அரசாங்க செலவுகளுக்குக் கடன் பணமாக உதவியது.

மத்திய வங்கி உதவிய கடன் பணத்தில் 38.5 சதவீதம் (77 லட்சம் ரூபாய்) அரசாங்க சேவையாளர் சேமிப்பு நிதியிலிருந்தே கிடைத்தது.

## தற்கொலை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்த்தம்மா யாழ்ப்பாணத்திலுள்ள கொய்யாத்தோட்டமென்னும் கிராமத்தைச்சேர்ந்தவரென்றும் குடுபத்தகராறின் காரணமாகவே இவர் தற்கொலை செய்யமுயன்றாரென்றும் தெரிகிறது.

ஊர்த்தம்மாகாங்கேசன்துறை பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தனது கணவரான களகரத்தினம் தனது தாயை ஆசைநாயகியாக வைத்திருக்கிறாரென்றும், இதனால்தான் மனம் வெறுப்புற்று அங்கு வந்து தற்கொலை செய்ய எத்தனித்ததாகவும் கூறினர்.

இவர் தற்கொலை செய்ய முயன்றதாகக் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் காங்கேசன்துறைப் பொலிசாரால் நாளை (இன்று) வழக்குத் தொடரப்படுமென தெரிகிறது.

காங்கேசன்துறை பொலிஸ் நிர்வாகப் பகுதியைச் சேர்ந்த பொலிஸ்இன்ஸ்பெக்டர் தியாகராசா மேற்கொண்டு புலன் விசாரணை செய்கிறார்.

—

கக் குற்றமசாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. அரசுவாலுடன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி குற்றவாளியென ஒப்புக் கொண்டதன் பேரில் மாஜிஸ்திரேட் அவருக்கு 6 கசையடி கொடுக்குமாறு தண்டனை விதித்து 2 வருட நன்னடத்தைப்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

# இ. போ. ச. நடத்திய ஆடிட் பரீட்சை

## இன்னும் முடிவு தெரியாத மர்மம்

கொழும்பு, புதன்

15 ஆடிட் அதிகாரிகளைத் திரட்டுவதற்காக இ. போ. ச. நடத்திய பரீட்சையின் முடிவு என்னவாயிற்று எனத் தெரியவில்லை.

6 மாதங்களுக்கு முன் இந்த வேலைகளுக்காக விளம்பரம் செய்யப்பட்டது. இரண்டு மாதங்களுக்குப் பின் ஒரு பரீட்சையும் நடத்தப்பட்டது.

பரீட்சை முடிந்து 4 மாதங்களாகியும் விண்ணப்பதாரர்களுக்கு எவ்விதத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. 75க்கு மேற்பட்டவர்கள் இப்பரீட்சையில் கலந்து கொண்டனர்.

## காப்பு திருடினராம்!

யாழ்ப்பாணம், வியாழன்

ஆரியகுளத்தைச் சேர்ந்த நடராசா என்பவரின் மகனை நாகராசா என்பவர் பவுன் காப்பு ஒன்றைத் திருடியதா

—

## அபிவிருத்தி வரியா தற்கொலை வரியா?

இரத்தினபுரி, புதன்

"தேசிய அபிவிருத்தி வரியைத் தேசிய தற்கொலை வரி என்றுதான் அழைக்கவேண்டும்." இவ்வாறு காவத்தையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் இலங்கைத் தோட்ட ஊழியர் சங்கத் தலைவர் திரு. டி. பி. கஸ்பே கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

மக்களின் பணம் சரியான முறையில் செலவிடப்படுமாயிருந்தால் தியாகம் செய்வதற்குப் பொதுமக்கள் விரும்புவார்கள். பொதுமக்களின் பணத்தை அரசாங்கம் மிகவும் ஊதாரித்தனமாகச் செலவு செய்கிறது. மந்திரிகளின் உல்லாச சுற்றுலாக்களில் 60,000 ரூபாய் பணம் செலவாகியுள்ளதென்றால் பொதுமக்கள் பணத்தை எவ்வளவு ஊதாரித்தனமாக அரசாங்கம் செலவு செய்கிறதென்பது புலனுகின்றது.

அபிவிருத்தி வரியினுல் நடுத்தர வகுப்பு மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாரமான வரிச்சுமைகளும், அதிகமான வாழ்க்கைச் செலவும் தற்கொலைக்குத்தான் வழிவகுக்கும். அதனுல் தான் தேசிய அபிவிருத்தி வரியை தேசிய தற்கொலை வரியென்றழைக்க வேண்டும் என்றேன்"

# ஒற்றுமைய்ய உருவாக்க எல்லோரும் முயலவேண்டும்

— பிஷப்

கொழும்பு, புதன்

"இந் நாட்டில் நாட்டுப்பற்றுடன் வாழ்பவர்கள் ஒருவருமில்லை. சில மாத காலங்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்களால் மக்கள் மனமுடைந்துள்ளார்கள் போலும். அச் சம்பவங்களே நாட்டில் குழப்பங்களையும் நெருக்கடியையும் உண்டாக்கியுள்ளன"

இவ்வாறு கொழும்பு அத்தியட்ச சபையில் பேசுகையில் கொழும்பு 'பிஷப்' கிரஹாம் காம்பல் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

இங்கு மனக்கசப்பினுலும், பீதியினுலும் கஷ்டப்படுபவர் தொகை அதிகம் என்பதில் ஐயமில்லை. மக்கள் தமது சலாச்சாரம் பறிபோய்விடும் என்று அச்சம்கொண்டுள்ளார்கள். அத்தோடு இந்த நாட்டின் நலனுக்காக வழ்வதற்கு தமக்கு சந்தர்ப்பம் கிடைக்குமா என்ற சந்தேகமும் மக்களிடையே எழுந்துள்ளது.

அரசாங்கத்துக்குள்ள பொறுப்புகளை எவரும் குறைத்துக் கூறிவிட முடியாது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பு அரசாங்கத்தின் மீதேசுமத்தப்பட்டுள்ளது.

சிதைந்துபோன ஒற்றுமையை திரும்பவும் சேர்த்து வைப்பதற்கு அரசாங்கம் தனது முழு அதிகாரத்தையும் உபயோகிக்க வேண்டும். சமீபத்தில் நடைபெற்றசம்பவங்களால் ஏற்பட்ட மனப் புண்களை ஆற்ற முயல்வது அரசங்கத்தின் முக்கிய பொறுப்பு.

சகல அரசியல் கட்சித் தலைவர்களும், எழுத்துவல்லமை படைத்தவர்களும், பேச்சாளர்களும்ஒற்றுமையைஉருவாக்கத் தக்கமுயற்சியெடுக்கவேண்டும்.

தம்மை ஒரு கிறிஸ்து சமயத்தவன் என்று கூறிக்கொள்ளும் ஒருவர் வெறும் பேச்சளவோடு நிற்காது எல்லோரும் என்றுபட்டு வாழ்வதற்கு செயயல்முறையில் வழிசெய்வேண்டும்.

# வர்த்தக குமாஸ்தாக்களுக்கு இரட்டிப்பு சம்பள உயர்வு

## யூனியனுடன் முதலாளிகள் பெடரேஷன் ஒப்பந்தம்

கொழும்பு, புதன்

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் வர்த்தக குமாஸ்தாக்களுக்கு இரட்டிபபு சம்பள உயர்வு அளிப்பதென்று, இலங்கை வர்த்தக சிப்பந்திகள யூனியனுடன் முதலாளிகள் பெடரேஷன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் போல், தேசிய குமாஸ்தாக்கள் யூனியனுடனும் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளும்.


அக்டோபர் 27ம் திகதி வெள்ளி முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

திரை உலகத்திற்கே ஓர் இலக்கணம் வகுக்கும் திரை ஓவியம்



மனோஹர், தேவிகா

எல். விஜயலக்ஷ்மி, டி. ஆர். ராமச்சந்திரன்

நடித்த

எம். ஏ. வி. பிக்சர்ஸ்

பாஞ்சாலி

மனோஹரா (யாழ்ப்பாணம்)

மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு

காலஞ்சென்ற பி. யூ. சின்னப்பா, என். எஸ். கிருஷ்ணன் நடித்த

ஜகதலப்பிரதாபன்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.